
உ
சிவமயம்

# பாதயாத்திரை
# வழி நடைப்பாடல்கள்



பக்தியுடன்

**சக்திவேல் நாச்சியப்பன்**
மேலைச்சிவபுரி

**22.1.2013**

**இரண்டாம் வெளியீடு**

உ

சிவமயம்

# பொருளடக்கம்


1. கற்பக விநாயகர் போற்றி ........................................................ 4
2. விநாயகர் துதி ( மங்களத்து நாயகனே ) .................................. 4
3. பிள்ளையார் வணக்கம் ( பிள்ளையார் பிள்ளையார் ) ............. 5
4. அருள்மிகு நடராஜர் பதிகம் ( அங்கும் இங்கும் எங்குமாய் ) ..... 6
5. அரஹர சிவனே ஆடுகவே ( ஆடுக நடனம் ஆடுகவே ) ........... 8
7. அம்பிகை அழகு தரிசனம் (கருவிலே திருவுடைய) .................... 9
9. காவடிப் பாட்டு ( காவடியாம் காவடி ) ......................................... 20
10. ஆறுமுக சுவாமி விருத்தம் ....................................................... 22
(ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலும் )
11. செந்தில் வளர் கந்தன் ( சந்தமிகு செந்தமிழில் ) ....................... 25
12. ஆடுக ஊஞ்சல் ஆடுகவே.......................................................... 26
13. ஆடுக முருகா ஆடுகவே(பிறவிகள் ஆயிரம் எடுத்தாலும்)....... 28
14. வீரவேல் வெற்றிவேல் ( சுட்டதிரு நீறெடுத்து )............................ 30
15. கொஞ்சுதமிழ்ப்பாமாலை (வேல் வேல்) .................................. 31
16. நலம் தரும் நாயகன் ( தென் பழநி ஆலயம் )............................ 32
17. ஆறுபடை வீடழகா (ஆறுபடை வீடழகா முருகா)....................... 34
18. ஸ்ரீ பழநி ஆண்டவர் திருப்பதிகம் ( மோதகம் நிவேதனம் )......... 36
19. படைவீட்டு வேலன் ( ஆறுமுக வேலவா அழகுமுகம் காட்டவா ) 37
20. கந்தர் சஷ்டி கவசம் ................................................................ 38
21. தங்க தேரில் வா........................................................................ 46
22. பழனி பதிக்கம்( ஒரு கனியை கணபதியே பெற்றதாளே).............. 48
23. தென்பரங்குன்றம் (வேலா வா கந்தா வா குமரா வாவா) .......... 51
24. காவிரி போல வளர்வோம் (அள்ளிக் கொடுப்பதில்).................... 52
25. சிவபுராணம்.............................................................................. 53
26. குமரனுட வேலு இது (குன்றுதோர் ஆடிவரும்)........................... 56
27. வேல் ! வேல்!! (வேல் வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்)......... 57
28. அப்பன் பழனி அப்பனடா............................................................ 58
29. அழைக்கட்டுமா ........................................................................ 59
30. சிறுவாபுரி முருகன் .................................................................. 59
(சிறுவாபுரியில் முருகா உனது சிந்தை இரங்காதோ)

31. சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு.............................................. 60
32. முத்தான முத்துக் குமரன்.......................................................... 62
33. ஒயிலாட்டம் ........................................................................... 62
(குந்தனுக்கும் வேல்வேல் / பச்சை மயில் வாகனம் )
34. தெண்டாயுதத்தானைக் கொண்டாடு மனமே ............................. 64
(ஆலோலம் பாடுகிற)
34. எத்தனை அலங்காரம் ................................................................ 65
35. பழனி மலையே உயிராகும் (ஆடும் மயிலும் வாகனந்தான்) 66
36. மலையினில் அரசு அமைத்த மன்னன் .................................... 66
(அப்பனுக்கு பாடம் சொன்ன சுப்பையா)
37. குறை ஒன்றுமில்லை கோவிந்தா .............................................. 68
38. ஸ்ரீ வெங்கடேசா ...................................................................... 69
39. மயில் ஆடும் மால் முருகன் ..................................................... 69
(வெற்றி வடிவேலனை வேங்கை மரமானவனை)
40. முருகா உன்னை அழைக்கின்றேன் ......................................... 71
41. ஆடுக மயிலில் ஆடுகவே......................................................... 73
42. எத்தனை அபிஷேகம் ................................................................ 76
43. சின்னச் சின்னக் காவடி ............................................................ 77
44. அவினாசி பத்து ........................................................................ 78
45. வேல்வேல் முருகா .................................................................... 82
(வாவா முருகா வடிவேலா வளரும் தமிழே சிவபாலா)
46. முருகையா முருகையா (பாசிபடர்ந்த மலை)................................ 85
47. பழநிமலை முருகா (நல்லதமிழ்ச் சொல்லெடுத்து)...................... 86
48. என்னோடும் பேசு சாமிநாதா (ஈசனோடு பேசியது போதுமே)..... 87
49. பச்சைமயில் வாகனன் (பச்சை மயில் வாகனனே சிவ).............. 88
50. சுப்பிரமணியர் துதி (முத்தைத்தரு பக்தித் திருநகை) ................... 88
51. சிறுவாபுரி பதிகம் ..................................................................... 89
52. செல்வமகன் பிறக்க வேண்டும் பழனியாண்டவா....................... 93
53. அருள்வாயே! அபிராமியே!......................................................... 94
54. வாழ்த்து ................................................................................... 95
55. வாழ்த்து ................................................................................... 96

# கற்பக விநாயகர் போற்றி

கங்கையென அருள் பொழியும் கருணை போற்றி !
கரத்தினிலே சிவலிங்கக் காட்சி போற்றி !
மங்கலம்சேர் ஓங்கார வடிவே போற்றி !
மலைக்கல்லில் வடிவெடுத்த மணியே போற்றி !
சங்கநிதி பதுமநிதி அனைய செல்வம் !
தனை அடைந்த சான்றோர்க்குத் தருவாய் போற்றி !
அங்கயர்கண் அம்மை தவமைந்தா போற்றி !
அருள் கொடுக்கும் கற்பகவிநாயகக் கடவுள் போற்றி !

# விநாயகர் துதி (அரோகரா)

மங்களத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா (அரோகரா)
பொங்குதன வயிற்றோனே பொற்புடைய ரத்தினனே (அரோகரா)
சங்கரனார் தருமதலாய் சங்கடத்தைச் சம்கரிக்கும் (அரோகரா)
எங்கள் குல விடிவிளக்கே எழில்மணியே கணபதியே ! (அரோகரா)

அப்பமுடன் பொரிகடலை அவலுடனே அருங்கதலி (அரோகரா)
ஒப்பில்லா மோதகமும் ஒருமனதாய் ஒப்புவித்து (அரோகரா)
எப்பொழுதும் வணங்கிடவே எமையாள வேண்டுமென (அரோகரா)
அப்பனவன் மடியமரும் அருட்கனியே கணபதியே ! (அரோகரா)

பிள்ளையாரின் குட்டுடனே பிழைநீக்கும் உக்கியிட்டு (அரோகரா)
எள்ளளவும் சலியாத எம்மனத்தை உமக்காக்கித் (அரோகரா)
தெள்ளியனாய்த் தெளிவதற்குத் தேன்தமிழில் போற்றுகின்றோம் (அரோகரா)
உள்ளியதை உள்ளபடி உகந்தளிப்பாய் கணபதியே (அரோகரா)

இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும் (அரோகரா)
நன்மணியே சண்முகனார் தன்னுடனே நீஎழுந்து (அரோகரா)
என்பணியை உன்பணியாய் எடுத்தாண்டு எமைக்காக்க (அரோகரா)
பொன்வயிற்றுக் கணபதியே போற்றியெனப் போற்றுகின்றோம் ! (அரோகரா)

– துர்கை சித்தர்

# பிள்ளையார் வணக்கம்

பிள்ளையார் பிள்ளையார்
பெரிய தொந்தி பிள்ளையார்
பையபைய நடந்து வந்து
பழம் பறித்த பிள்ளையார் –பிள்ளையார்

செல்வம் தரும் பிள்ளையார்
சிவல் புரியின் பிள்ளையார்
சங்கரனின் மூத்த மகன்
சாமிநாதப் பிள்ளையார் –பிள்ளையார்

வேலவனை வழி யனுப்பி
வெற்றிதரும் பிள்ளையார்
வீடுவந்து சேர்ந்தவுடன்
விருந்து வைக்கும் பிள்ளையார் –பிள்ளையார்

குள்ளக் குள்ள பிள்ளையார்
குண்டு வயத்து பிள்ளையார்
குட்டி குட்டி உக்கி போட்டு
கும்பிடலாம் பிள்ளையார் –பிள்ளையார்

கருணையுள்ள பிள்ளையார்
கண்மாய்க்கரை பிள்ளையார்
காலமெல்லாம் காத்திருந்து
கணக்கெழுதும் பிள்ளையார் –பிள்ளையார்

ஆற்றங்கரை பிள்ளையார்
ஐந்து கர பிள்ளையார்
அன்னையை போல் பெண் பார்க்கும்
ஆனைமுக பிள்ளையார் –பிள்ளையார்

சித்தி தரும் பிள்ளையார்
முக்தி தரும் பிள்ளையார்
செந்தில் வடி வேலனுக்கு
முந்தி வந்த பிள்ளையார் –பிள்ளையார்

பரம் பொருளாம் பிள்ளையார்
பரமன்மகன் பிள்ளையார்
பழநி சென்று வந்தவர்க்கு
பலன் கொடுக்கும் பிள்ளையார் –பிள்ளையார்

***

# அருள்மிகு நடராஜா பதிகம்

ஓம் நமச்சிவாய ஓம் ஓம் நமச்சிவாய
ஓம் நமச்சிவாய ஓம் ஓம் நமச்சிவாய

அங்கும் இங்கும் எங்குமாய் அமைந்த தேவதேவனே !
ஆதியாய் அநாதியாய்ச் சமைந்த ஜோதி ரூபனே !
மங்களங்கள் யாவும் நல்கும் அம்பிகை மணாளனே
மைந்தன் செய்யும் பூஜையில் மகிழ்ந்தருள்நடேசனே (ஓம்) 1

எந்த இல்லம் ஆயினும் இருந்த இல் சிதம்பரம்
எடுத்த பீடம் ஆலயம் தொடுத்த கூரை கோபுரம்
செந்தமிழ்ச்சொல் மந்திரம் திருந்தும் அன்பே ஆகமம்
சிவந்தபாத பங்கயம் உவந்தருள் நடேசனே ! (ஓம்) 2

மன்றிலே எடுத்த கால் என் மனையிலும் எடுத்துவை
மனதிலே நினைத்த நன்மை விரைவிலே முடித்துவை
என்றும் தீமை அணுகிடாமல் ஈசனே தடுத்து வை
ஏத்தும் அன்பர்குழுவில் என்னைச் சேர்த்துவை நடேசனே ! (ஓம்) 3

ஆபயந்த ஐந்தினோடு பால் பழம் பஞ்சாமிர்தம்
ஆலைவாய்க் கரும்பு தெங்கு தேன் சுகந்த சந்தனம்
நீபயந்த யாவையும் நினக்களித்தேன் ஈசனே!
நேர்த்தியாய் அனைத்தும் ஆடி வாழ்த்துவாய் நடேசனே ! (ஓம்) 4

அட்டநாக பூஷணம் அளிக்க வல்லன் அல்லனே
ஆனை மான் சிறுத்தை வேட்டை ஆடவல்லன் அல்லனே
இட்ட மாலை ஆடையோடு தொட்டுவைத்த சந்தனம்
என்றும் நல்கவல்லன் வல்லன் கொண்டருள் நடேசனே ! (ஓம்) 5

வில்லினால் அடிக்கவோ ? வீசுகல் பொறுக்கவோ ?
மிதித்த போதுகை பிரம்பை மேலும் நான் எடுக்கவோ ?
நல்ல பிள்ளை என்னை ஆளும் நாதனும் நீ அல்லவோ ?
நாளும் நான் படைத்த சொல்லும் பூவும் கொள்நடேசனே (ஓம்) 6

ஆடநீ எடுத்ததாய் அறிந்தவர் இயம்புவார்
அல்ல அல்ல என் தலைமேல் சூட என்று சொல்கிறேன்
ஈடில்லாத தெய்வம் நீ இடப்புறம் எடுத்தகால்
எந்த நோக்கில் என்று சொல்ல வந்தருள் நடேசனே ! (ஓம்) 7

மழுவெடுத்(து) எதை விளக்க மன்றுதோறும் ஓடினாய் ?
மதியெடுத்த சிரம் இருக்க மத்தனாய் ஏன் ஆடினாய் ?
கழுதெடுத்து நடனம் ஆடும் காட்டில் என்ன தேடினாய்
கையில் நான் எடுத்த தூபம் கொள்ளுவாய் நடேசனே ! (ஓம்) 8

எடுத்த தூபம் ஆதியாவும் ஏற்றருள் மகேசனே !
இன்று நான் படைத்த யாவும் உண்ணுவாய் சபேசனே !
தடுத்த பண்டை வினையகற்றித் தாங்குவாய் சர்வேசனே !
சரணம் உன்னையன்றி ஏது? தாங்குவாய் நடேசனே ! (ஓம்) 9

வாழி நீபடைக்கும் தெய்வம் மலரணை அமர்ந்ததாம் !
வகுத்தளிக்கும் தெய்வம் கூட அரவணை கிடந்ததாம் !
ஊழிதோறும் ஐந்தொழில் உவந்து செய்யும் ஈசனே ! ஓய்ந்து
சற்றென் நெஞ்சணைக் கண் சாய்ந்து கொள் நடேசனே ! (ஓம்) 10

ஓம் நமச்சிவாய ஓம் சிவாய நமரூபனே !
ஓதும் ஐந்து சபையில் ஆடும் பாதனே சங்கீதனே
வாமியாய்த் தலைத்த சிவகாமி காதல் நேசனே
மாறிலாத கருணை நீ வழங்குவாய் நடேசனே (ஓம்) 11

***

# அரஹர சிவனே ஆடுகவே

ஆடுக நடனம் ஆடுகவே
அரஹர சிவனே ஆடுகவே
ஆடுக நடனம் ஆடுகவே
அரஹர சிவனே ஆடுகவே (ஆடுக)

சிவகை லாசா பரமேசா
திரிபுரம் எறித்த நடராசா
பவபயம் போக்கும் பரமேசா
பனிமலை ஆளும் சர்வேசா (ஆடுக)

அறுகொடு தும்பை மலராட
அணிமணி மாலைகள் தானாட
பெருகிடும் கங்கை தலையாட
பிறைமதி யதுவும் உடனாட (ஆடுக)

சூலம் உடுக்கை சுழன்றாட
சூழும் கணங்கள் உடனாட
ஆலம் குடித்தோன் ஆடுகவே
அடியார் மகிழ ஆடுகவே (ஆடுக)

ஆலவா யரசே சொக்கேசா
அவனியைக் காக்கும் பரமேசா
ஆலங்காட்டில் ஆடிடுவாய்
அரஹர சிவனே ஆடுகவே (ஆடுக)

திருக்கட வூரின் கடயீசா
தில்லையம் பதியில் நடராஜா
திருமுல்லை மாசில்லா மணியீசா
திருநடனம் ஆடுக ஆடுகவே (ஆடுக)

மயிலைக் கபாலி ஈஸ்வரனே
மதுரையில் ஆடிய ஆட்டமென்ன
கயிலையில் ஆடிய ஆட்டமென்ன
கால்மாறி ஆடுக ஆடுகவே (ஆடுக)

– சோலை இராமச்சந்திரன்

***

# அம்பிகை அழகுதரிசனம்

ஓம் சக்தி ! ஓம் சக்தி ! ஓம் சக்தி ! ஓம் !
ஓம் சக்தி ! ஓம் சக்தி ! ஓம் சக்தி ! ஓம் !

கருவிலே திருவுடைய நல்லறிவா ளர்தமது
கனிவான நட்பு வேண்டும்
காசுபண ஆசைகளில் வேசியரைப் போலாடிக்
கறவாத புத்தி வேண்டும் (ஓம் சக்தி)

அருளுடைய பெரியவர்கள் ஆசிவேண்டும் நெஞ்சில்
அகலாத அன்பு வேண்டும்
ஆதரவில் லாதவரில் நல்லவரைப் பார்த்து நான்
ஆதார மாக வேண்டும் (ஓம் சக்தி) 1

மருளுடைய மான்போலும் மங்கை ஒரு தேவிஎன்
மனையாட்டியாக வேண்டும்
மானமெனும் ஒன்றிலே மாறாத குறிவைத்து
வாழ்க்கையைக் காக்க வேண்டும். (ஓம் சக்தி)

இருளகல ஒளிவீசும் இறைவனது தேவியே
இவைசேர வேண்டும் எனையே !
இனியதொரு மதுரைநகர் அரசுவீற் றிருக்கின்ற
இளைய மீனாட்சி உமையே ! (ஓம் சக்தி) 2

ஆழ்கடலில் போட்டாலும் அக்கினியி லிட்டாலும்
அழியாத மேனி வேண்டும்
அருநோய்கள் பலகூடி உடல்மீது தொடுத்தாலும்
அலறாத நெஞ்சம் வேண்டும் (ஓம் சக்தி)

ஊழ்வினைகள் ஒன்றாகி உயிர்வாதை செய்தாலும்
ஒளிசிந்தும் இதழ்கள் வேண்டும்
உச்சத்தில் நின்றபடி கீழே விழுந்தாலும்
உலையாத திறமை வேண்டும் (ஓம் சக்தி) 3

பாழ்வழி யிலேதூங்கிப் பசியோ டிருந்தாலும்
பக்தியில் உறுதி வேண்டும்
பயமாகத் தோன்றுவதை நயமாக மாற்றுகிற
பலமான அறிவு வேண்டும் (ஓம் சக்தி)

சூழ்வதெல்லாம் நீயென்ற துணிவுதா தேவியே
சொக்கனின் அன்பு மனையே !
தொல்மதுரை நகருக்குப்பல்லாண்டு பாடிடும்
தூய மீனாட்சி உமையே ! (ஓம் சக்தி) 4

முன்னாளில் சென்றதைப் பின்னாளில் நினைக்கின்ற
மூடமை தீர்க்க வருவாய்
மூதறிஞர் சொல்கேட்டும் பேதமைமாறாத
முறைகேடு நீக்க வருவாய் (ஓம் சக்தி)

பொன்னான காலத்தை பாழ்செய்து தூங்காமல்
புகழ்மாலை சூட்ட வருவாய்
பொய்யர்கள் நடுவிலும் நல்லதே நினைக்கின்ற
புத்தியை கொண்டு வருவாய் (ஓம் சக்தி) 5

மன்னாதி மன்னரும் மண்டியிட்டே என்னை
வணங்கிடும் பெருமை அருள்வாய்
மலைமீது நின்றாலும் அவமான ஆணவம்
மண்டாமல் காக்க வருவாய் (ஓம் சக்தி)

தென்னாடும் வடநாடும் ஒருங்கே பணிக்கின்ற
செல்வ மலை ராஜன் மகளே
திருமதுரை நகராளும் தருமதுரை ராணியே
தெய்வ மீனாட்சி உமையே! (ஓம் சக்தி) 6

ஆடுகிற பம்பரம் ஆடல் நிறுத்தாமல்
ஆடுவதும் உன் செய்கையே
அஞ்சுகிற நெஞ்சமும் ஆர்ப்பரித்தே நின்று
அரசோச்சல் உன் செய்கையே (ஓம்சக்தி)

பாடுகிற பாவலன் பல்லாயிரம் பாடல்
பாடுவதுடன் உன் செய்கையே
பல்லக்கில் ஏறுவதும் செல்வாக்கு மீறுவதும்
பரமாத்ம நின் செய்கையே (ஓம்சக்தி) 7

கூடுகிற கூட்டத்தில் மாலை மரியாதைகள்
கூடுவதும் உன் செய்கையே
குற்றங்களை நீக்கி சுற்றங்கள் ஒன்றாகி
கொஞ்சுவதும் உன் செய்கையே (ஓம்சக்தி)

கோடுநதி மாகடலில் கொள்கைகளை காட்டிடும்
கோமகனின் அன்பு மயிலே
கொற்றவர்கள் ஆண்டதிரு கூடல்நகர் ராணியே
கோதை மீனாட்சி உமையே (ஓம்சக்தி) 8

கல்லாக மரமாக காய்ந்தவர் தம்மையும்
கனியாக மாற்றும் அருளே
கந்தல் உடைகட்டி அம்மா என்பார் வாழ்வில்
கடலாகப் பொங்கும் அருளே (ஓம்சக்தி)

சொல்லோடு பொருளோடு சுவையோடு விளையாடச்
சுகமாக வந்த தமிழே
தொடைமீது குருநாதன் தனை வைத்த சிவனுக்கும்
சுடராக நிற்கும் அமுதே (ஓம் சக்தி) 9

கல்லார்க்கும் கற்றார்க்கும் காணார்க்கும் கண்டார்க்கும்
கரையேற்றம் நல்கும் கலையே
கல்யாணம் இல்லாத கன்னிப் பெண் கண்ணீரைக்
காலத்தில் நீக்கும் சிலையே (ஓம் சக்தி)

எல்லார்க்கும் எல்லாமும் எப்போதும் தருகின்ற
ஏகாம்பரன் தேவியே
எழில்பொழியும் காஞ்சிநகர் அரசு புரி ராணியே
ஏதில் காமாட்சி உமையே ! (ஓம் சக்தி)10

மழைக்காலம் குளிர்காலம் வருங்காலம் நிகழ்காலம்
வரிபோட் டனுப்பும் அழகே
மதியென்றும் நிதியென்றும் சதியென்றும் பதியென்றும்
மடல் தந்து கூட்டும் மலரே (ஓம் சக்தி)

அழைத்தாலும் வெறுத்தாலும் அடித்தாலும் அணைத்தாலும்
அன்றாடம் உதவும் கனியே
அலைந்தாலும் தவித்தாலும் அமர்ந்தாலும் படுத்தாலும்
அருகாக நிற்கும் துணையே (ஓம் சக்தி) 11

அழக்கூட வழியற்ற பிள்ளைக்குப் பாலூட்டி
அறந்தந்த தெய்வ நிலையே
அடியார்க்கும் அடியாரை சிறியார்க்கும் சிறியாரை
அணைக்கின்ற அன்பு நிலையே (ஓம் சக்தி)

இழைக்கின்ற உள்ளத்தை எனக்கும் அளிக்கின்ற
ஏகாம்பரன் தேவியே
எழில் பொழியும் காஞ்சிநகர் அரசுபுரி ராணியே
ஏதில் காமாட்சி உமையே ! (ஓம் சக்தி) 12

வீட்டுக்குள் நகைவைத்து பூட்டிவிட்டால் அங்கு
வெளியிலே நீ நிற்கிறாய்
விளக்கிலே நெய்யின்றி விம்முவார் கண்முன்பு
விளக்கமே நீ வைக்கிறாய் (ஓம் சக்தி)

காட்டிலே விட்டாலும் கண்கட்டி வித்தையோல்
கைதந்து நீ காக்கிறாய்
காணாத பிள்ளையைத் தேடினால் நீ வந்து
கருணையோடெனைப் பார்க்கிறாய் (ஓம் சக்தி) 13

கூட்டிலே இட்டாலும் குயில்முட்டை தன்னைக் காத்து
குஞ்சாக நீ ஆகிறாய்
குழியிலே எறும்புக்கும் கோட்டிலே யானைக்கும்
கொள்கையை நீ சொல்கிறாய் (ஓம் சக்தி)

ஏட்டிலே படித்தாலும் எப்போதும் இனிக்கின்ற
ஏகாம்பரன் தேவியே
எழில்பொழியும் காஞ்சிநகர் அரசுபுரி ராணியே
ஏதில் காமாட்சியே உமையே (ஓம் சக்தி) 14

ஊமைக்குழந்தைக்கு நின் மகன் வேல்கொண்டு
ஓ மென்று எழுதவில்லையோ
உழல்கின்ற பாண்டவர் பாரதப் போருக்கு
உன் அண்ணன் உதவவில்லையோ (ஓம் சக்தி)

காமனை கண்ணாலும் திரிபுரம் சிரிப்பாலும்
கணவனை எரிக்க வில்லையோ
காட்டிலும் மேட்டிலும் கரையிலும் நின் பிள்ளை
கவலைகள் தீர்க்கவில்லையோ (ஓம் சக்தி) 15

சாமத்தில் உன்நாதன் சிவனுக்கு எனைப்பற்றி
சரியாக சொல்லவில்லையோ
சரிகமவென்றே பாடி பார்க்கிறேன் நீ இன்னும்
சங்கீதமாக விலையோ (ஓம் சக்தி)

எமன் நெருங்காமல் என் வாழ்வு காக்கின்ற
ஏகாம்பரன் தேவியே
எழில்பொழியும் காஞ்சிநகர் அரசுபுரி ராணியே
ஏதில் காமாட்சியே உமையே ! (ஓம் சக்தி) 16

நீராடை நெய்பூசி புத்தாடைகள் கட்டி
நேர்வந்த கன்னியரெல்லாம்
நிழல்கண்டு துணை கண்டு மகவோடு பொருள் கண்டு
நிலையான வாழ்வுமடைவார் (ஓம் சக்தி)

போராடிப் போராடிப் பலதுன்பம் பெற்றோர்கள்
புகழார்ந்த அமைதிய டைவார்
புண்ணாகி மரணத்தைப் கண்ணாக நினைப்போர்கள்
புதுவாழ்வு தாமுமடைவார் (ஓம் சக்தி) 17

வாராத படியேறி வந்தோர்கள் எல்லோரும்
வளமான செல்வமடைவார்
வயதான முதியோரும் ஜெயதேவி உனைக்கான
மாறாத இளமையடைவார் (ஓம் சக்தி)

ஏரளார் குரலோடு எழில் நடன மிடுகின்ற
இனிய நடராஜன் துணையே
இதமுடைய பொன்னிநதி கரைபுரளும் தில்லைநகர்
இன்ப சிவகாமி உமையே ! (ஓம் சக்தி 18

தந்தைஎன் றேநாதன் தாளங்கள் போடுவான்
தத்தைகள் ஓடிவருவார்
தாதாவென்றே மன்னன் தாவிக் குதிக்கையில்
தருவார்கள் பக்கம் வருவார் (ஓம் சக்தி)

தித்தை என் றேவள்ளல் ஆடும் களத்தில்
தித்திக்கும் மொழிபேசுவார்
திகதீம்என் றேதேவன் திரும்பக் குதிப்பனேல்
தீயோர்கள் ஓடிவிடுவார் (ஓம் சக்தி 19

வித்தைகள் பலகற்ற சிற்சபை ஈசனும்
விடையேறும் போது உன்னை
விட்டும் விடாமலும் உன்னை பிடிக்கின்றான்
விடலாமோ நீயும் என்னை (ஓம் சக்தி)

நத்தையும் நடமாடக் கால்தூக்கி நடனமிடும்
நடராசன் கொண்ட துணையே
நதிபெருகும் தில்லைநகர் அரசுபுரி ராணியே
நங்கைசிவ காமி உமையே ! (ஓம் சக்தி 20

கருவிலே நான் தூங்கி காலங் கழிக்கையில்
காற்றாக வந்தவள் நீ
கையிலே பிள்ளையாய் பையக்கிடக்கையில்
கனிந்த பாலானவள் நீ (ஓம் சக்தி)

உருவிலே பெரிதாகிப் பள்ளிக்கு செல்கையில்
உடன் வந்த கல்வியும் நீ
உறவிலே ஒன்றாகி திருமணம் நடக்கையில்
ஒளிமாலை ஆனவள் நீ (ஓம் சக்தி) 21

திருவோடு பிள்ளை என்மனையிற் பிறக்கையில்
சீர் தந்த ஆட்சியும் நீ
தேசங்கள் யாவிலும் தொழில்செய்யச் செல்கையில்
செல்வமாய் நின்றவள் நீ (ஓம் சக்தி)

குருவான குமரனின் அறிவான அன்னையே
கோல நடராசன் துணையே
கோவிலிடை அந்தணர்கள் கூடிவரும் தில்லையில்
கொஞ்சும் சிவகாமி உமையே ! (ஓம் சக்தி) 22

பட்டாடை கட்டி உன்னைப்பார்க்கின்ற வேளையில்
பத்தினியை நான் பார்க்கிறேன்
பல்லக்கில் எறிநீ ஊர்முழுதும் செல்கையில்
பைரவியை நான் பார்க்கிறேன். (ஓம் சக்தி)

எட்டாத தேர்நடுவில் உன்னை வைக்கையில்
இன்தமிழை நான் காண்கிறேன்
எங்கெங்கு போயினும் எதனை நான் காண்கினும்
அங்கெல்லாம் உனைக் காண்கின்றேன் (ஓம் சக்தி) 23

தொட்டார்க்கு தாயாக தொடர்வாருக்கு சேயாக
தோகை நீ ஆனதென்ன
சோழகுலம் ஆளும்வரை பலகாலம் நீ அங்கு
துணையாய் இருந்ததென்ன (ஓம் சக்தி)

கொட்டாத மேளங்கள் கொட்டுகிற கூத்தாடி
கோல நடராசன் துணையே
கொடிவளரும் தில்லைநகர் நடுவிலொரு திருக்கோயில்
கொண்ட சிவகாமி உமையே ! (ஓம் சக்தி) 24

ஆசையுடன் ஒரு நூறுபாடலுனக் கணிவித்த
அபிராம பட்டருக்கு
அமாவாசை யன்றந்த நிலவுவரச் செய்தாயே
அதுபோதும் பக்தருக்கு (ஓம் சக்தி)

தாசி எனச் சொன்னாலும் தகைமை நிலைமாறாத
தங்க மயில் மாதவிக்கு
தங்க இடம் தந்தாயே தனியுறவு கொண்டாயே
சாட்சியிது காதலுக்கு (ஓம் சக்தி)25

பூசுவது வெண்ணீறு பூணுவது திலகமென
பூசைசெய்யும் பெண்களுக்குப்
போனபிறப் பென்றாலும் வந்தபிறப் பென்றாலும்
புகழ் தந்தாய் கண்களுக்கு (ஓம் சக்தி)

தேசுலவும் சோழர்களின் காலம் முதல் இன்று வரை
தெய்வநிலை பெற்ற சிலையே
திருமுகமும் குங்குமமும் ஒருசேர ஒளிவீசும்
திருக்கடவூர் அபிராமியே ! (ஓம் சக்தி) 26

காவிரிப்பூம் பட்டினத்து வாணிகரைத் தாலாட்டி
காத்தது உன் கண்களிலையோ
கல்லிருக்கும் சோலைகளின் உள்ளிருந்து குலமாதர்
காவல்தரும் தெய்வமில்லையோ (ஓம் சக்தி)

கோவலனைக் கூடலிலே கொன்றவுடன் கண்ணகியின்
கூட்டினுள் நீ செல்லவில்லையோ
கொற்றவரைப் பத்தினியைப் பார்ப்பனரை விட்டு விட்டு
மற்றவரைக் கொல்ல வில்லையோ (ஓம் சக்தி) 27

பாவலர்க்கு நல்லதமிழ் படியளந்து தந்துவிட்டு
பாடல் நீ பெற்ற திலையோ
பாலோடு சந்தனமும் பரிசாக வைத்தவர்க்கு
பாவை நீ காவலிலையோ (ஓம் சக்தி)

பூவிரிய வண்டுவர நின்முகத்தைப் பார்த்தவுடன்
        பூசை செய்ய வைத்த மயிலே
போதவிழும் திருக்கடவூர் தேவர்நக ராகவந்த
        பொன்மேனி அபிராமியே                    (ஓம்சக்தி) 28

திருமகளும் கலைமகளும் அலைமகளும் உள்ள இடம்
        திருக்கடவூர் சங்கமல்லவோ
சிவபெருமான் திருமாலும் பிரம்மாவும் வந்த இடம்
        திருக்கோவில் மேடையல்லவோ                    (ஓம் சக்தி)

பரவமுயர் பெண்களோடு பலபெற்ற தாய்மாரும்
        பார்ப்பது உன்வடிவமல்லவோ
பாவிகளும் வந்தவுடன் புண்ணியர்கள் ஆகுமிடம்
        பாவை உன் சோலையல்லவோ                    (ஓம் சக்தி) 29

ஒருபிறவி மறுபிறவி எழுபிறவி வந்தாலும்
        உன்னையே பணிய அருள்வாய்
உலகமெனை அறியாத புல்லாய்க்கிடந்தாலும்
        உன் மனம் முளைக்க அருள்வாய்                    (ஓம் சக்தி)

அருள்வளர மருள் அகல ஆதிக்கம் செய்கின்ற
        அமிர்த கடேசன்தன் துணையே
அழகு திருக்கடவூரில் பழகு தமிழ் உரையாடும்.
        அன்பு மயில் அபிராமியே !                    (ஓம் சக்தி) 30

ஏழுலகம் முடிசூட்ட கவிராஜ சிங்கமென
        எனை மாற்ற வேண்டும் நீயே
எதிரொருவர் இல்லாது புதுமைகளை நான் செய்ய
        ஏற்றமுற வேண்டும் தாயே                    (ஓம் சக்தி)

வாழும்வரை நலமாக மற்றோர்குத் துணையாக
        வாழ்விக்க வேண்டும் தாயே
வந்தாலும் போனாலும் வாடாமல் உள்ளத்தை
        வளமாக்க வேண்டும் தாயே                    (ஓம் சக்தி) 31

விழுவது உன்பாதம் விளங்குவது வேதமென
விதிவைக்க வேண்டும் நீயே
விளையாட்டு பிள்ளைஎனை வழிகாட்டி அழைத்தேநீ
வினைதீர்க்க வேண்டும் தாயே (ஓம் சக்தி)

சூழுமொரு சோலையிடை அமுதீசர் பாகத்தில்
துணையாக நிற்கும் மயிலே
சோலை திருக்கடவூரில் ஆதிஉமை வடிவாகச்
சுடர்வீசும் அபிராமியே ! (ஓம் சக்தி 32

காலமகள் விளையாடும் நீலமணிக் கடல்மீது
கங்கை நதி சேரும் போது
கண்ணெதிரில் உன் பிள்ளை உன்னோடு சேராமல்
கண்ணீரில் நிற்பதேது (ஓம் சக்தி )

ஆலமர நிழலாக ஆதரவு தந்தாலும்
அல்லலுறும் எனது வாழ்வு
அம்மாவுன் திருவடியை அடைந்தாலே அமைதி வரும்
அடுத்ததொரு பிறவி ஏது (ஓம் சக்தி 33

மாலவனின் தங்கைக்கு வானகமும் மண்ணகமும்
மலர் பூக்கும் சோலையல்லவோ
வரவேண்டும் உனதுமடல் தரவேண்டும் உன்கருணை
வானக மிலாத நிலவோ (ஓம் சக்தி

கோலமிகு விசுவேசன் காசிநகர் தன்னிலே
கொண்டாடும் அன்பு மயிலே
குடையளவு நான் காணக் கொடையளந்து கொண்டுவா
கோதை விசாலாட்சி உமையே ! (ஓம் சக்தி 34

ஆத்தாளுன் சந்நிதியை அறியாத பிள்ளைநான்
ஆனாலும் கவிதை சொன்னேன்
ஆடிவரும் கங்கயில் மூழ்காத காக்கை நான்
ஆனாலும் பேறுபெற்றேன் (ஓம் சக்தி)

காத்தானும் மங்களக் கையோடு முகத்தையும்
கற்பனையில் காணுகின்றேன்
கட்டாயம் உன்னருளைப் பெற்றேநான் வாழ்கிறேன்
காலத்தில் அங்கு வருவேன் (ஓம் சக்தி) 35

சேர்த்தானும் அன்னையே சேய் செய்த பாவத்தை
சிறிதும் நீ மதிக்க வேண்டாம்
சிற்றறிவை ஆசானின் பேரறிவு காப்பதுவும்
தேவி நீ மறந்த ஒன்றா (ஓம் சக்தி)

பூந்தாமரைஎன பொங்கு சின நாகத்தைப்
புரிந்தவன் கலந்த மயிலே
புகழ்பெருகு காசிநகர் தகவுடைய தேவியே
பூவை விசாலாட்சி உமையே (ஓம் சக்தி) 36

மானிடம் பெரிதன்று பூமியில் பிறந்த நான்
மதிகெட்டுச் சொன்னதுண்டு
மண்ணிலே புழுபூச்சி தன்னைவிட ஈனமாய்
வாழ்க்கையைப் பார்த்ததுண்டு (ஓம் சக்தி)

ஊனுடல் மண்கேட்க உயிர்தனை நீ கேட்டு
ஊடாடி நிற்ப துண்டு
ஓங்கு வளர்மரங்களும் பாம்புடன் வாழ்வதை
உளம் நொந்து பார்ப்பதுண்டு (ஓம் சக்தி) 37

நானிடர்பட்டபின் மானிடப் பிறவியை
நலமிலாப் பிறவி என்று
நன்றாகக் காண்கிறேன் மன்றாடி நிற்கிறேன்
நாடாதோசொர்க்க மென்று (ஓம் சக்தி)

தேனிடம் மொழிவாங்கி விசுவேசன் மடியிலே
சிந்திடும் அன்பு மயிலே
சிறுகூடற்பட்டி வரை மறுபிறவி எடுத்தாயென்
தெய்வ விசாலாட்சி உமையே (ஓம் சக்தி) 38

உள்ள நாள் வரையிலே நன்மையும் தீமையும்
நன்றென்றே எண்ணும் வரம்தா
உறவோடு பகையையும் இரவோடு பகலையும்
ஒருமித்துப் பார்க்க வரம்தா (ஓம் சக்தி)

வெள்ளம்போல் செல்வமும் வறுமையும் சமமென்று
விளையாடும் வாழ்க்கை வரம்தா
விதியென்றும் வலியதே மதியென்றும் சிறியதே
வினை தீர்த்து நல்ல துணைதா (ஓம் சக்தி) 39

பள்ளம் போல் இகழையும் மலைபோல் புகழையும்
பந்தாடும் வீர நிலைதா
பழிவாங்கும் பசியையும் பலசுவை உணவையும்
பதறாமல் கொள்ள வரம்தா (ஓம் சக்தி)

அள்ளிடும் கையிலும் அர்த்த சாமத்திலும்
அருள் செய்யும் அன்பு மயிலே
அறமுடைய வணிகர் குலம் சிலைவைத்த தேவியே
அழகு விசாலாட்சி உமையே (ஓம் சக்தி) 40

– கவிஞர் கண்ணதாசன்

***

# காவடிப்பாட்டு

காவடியாம் காவடி
கந்தவேலன் காவடி
கண்கொள்ளாக் காட்சிதரும்
கடம்பனுக்குக் காவடி (காவடி) 1

வேல்முருகன் நாமத்திலே
விதவிதமாய்க் காவடி
வெற்றிவேலன் காவடி
வீரவேலன் காவடி (காவடி) 2

சிங்கார வேலனுக்கு
சின்னச் சின்னக் காவடி
வண்ணமயில் தோகையோடு
ஆடிவரும் காவடி (காவடி) 3

பழநிமலை பாலனுக்கு
பால்குடத்தால் காவடி
தென்பழநி வேலனுக்கு
தேன் குடத்தால் காவடி (காவடி) 4

சுவாமிநாத வேலனுக்கு
சந்தனத்தால் காவடி
பாலசுப்பிரமணியனுக்கு
பஞ்சாமிர்தக் காவடி (காவடி) 5

ஆறுமுக வேலனுக்கு
அழகுமயில் காவடி
வண்ண வண்ணக் காவடி
வெற்றிவேலன் காவடி (காவடி) 6

மயூர நாதனுக்கு
மச்சத்தால் காவடி
குன்றக்குடி குமரனுக்கு
குறைவில்லாத காவடி (காவடி) 7

பக்தரெல்லாம் கொண்டாடும்
காவடியாம் காவடி
பாமாலை பாடி ஆடி
நாடிவரும் காவடி (காவடி) 8

கண்கொள்ளாக்காட்சி தரும்
கந்தவேலன் காவடி
காவடியாம் காவடி
காணவேண்டும் கண்கோடி (காவடி) 9

❋❋❋

# ஆறுமுக சுவாமி விருத்தம்

ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலும்
அலங்கார ஆபரண மணிந்த மார்பும்
திருமுகமும் வெண்ணீரும் புனைந்த மெய்யும்
ஜெகமெலாம் புகழ்படைத்தாய் சுப்பிரமண்யா
முருகாசர வணபவனே கார்த்தி கேயா
முக்கணனார் புத்திரனே உக்ரவேலா
இருவருமே உனைப்பணிந்தோம் பழநிவேலா
இதுசமயம் அடியாரை ரட்சிப் பாயே! 1

மயிலேறி விளையாடும் சுப்பிரமண்யா
வடிவேலா உன்பாதம் நம்பி னேனே
உயிரிழந்து அபகீர்த்தி யாகும்வேளை
உன்செயலால் இதுசமயம் உயிரைக் காத்தாய்
தயவாக இனிமேலும் உயிரைக் காத்து
சண்முகனே அடியார்தம் துயரம் தீர்ப்பாய்
வைபோக மானமலை பழநி வேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப் பாயே 2

வருந்துமடியார் உயிரைக் காக்கும் தெய்வம்
வையகத்தில் வேறொரு வரில்லை யென்று
அறிந்துநான் உனைப் பணிந்தேன் சுப்பிர மண்யா
ஆதரித்து பிராணபயம் தீருமையா
திரிந்தலைந்து அறுமூன்று திங்களாகச்
சிறையிலிருந்து தளைப்பூண்டு சின்னமானேன்
பறந்துவரும் மயிலேறும் பழநி வேலா
பண்பாக உயிர்காத்து ரட்சிப் பாயே. 3

பெருவேங்கை புலிபிடித்த பசுவைப்போல
பிதுர் கலங்கி மனம்தளர்ந்து புலம்பினோமே
இருவருமே உனைக்கூவச் செவி கேளாதோ
இதுசமயம் தாமதமாயிருக்க லாமோ
குருவாகி தந்தை தாய் நீயேயாகில்

குமரேசா பிராணபயந் தீரு மையா
முருகேசா இதுசமயம் பழநி வேலா
முன்வந்து உயிர்காத்து ரட்சிப் பாயே 4

பாம்பின்வாய் சிக்கியதோர் தேரை போல
பதைபதைத்து வாடுகிறோம் பாலர்நாங்கள்
தேம்பியே புலம்புகிறோம் துயர மாகி
தென்னவனே உன்செவிக்கு கேளா தோதான்
நான்புவியில் உனைநம்பி மகிழ்ந் திருந்தேன்
நாயேனுக்கு அபாயம் வரநியாய மோதான்
சாம்பசிவன் புத்திரனே பழநி வேலா
சமயமிது உயிர்காத்து ரட்சிப் பாயே ! 5

வலையிலகப்பட்ட உயிரது போல் மயங்கு கிறோமே
வடிவேலா இதுசமயம் துயரம் தீர்ப்பாய்
கொலைகளவு பாதகங்கள் பொய்யிருந்த தெல்லாம்
கொடும்பழிகள் வஞ்சனை பில்லி சூனியமெல்லாம்
தொலையாத சிறுபிணிநோய் வல்வினை களெல்லாம்
துறத்து மையா மயிலேறும் சுப்பிரமணியா
மலையிலுறை வாசனே பழநிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே ! 6

நாகமது கெருடனைக்கண்டலைந்தாற் போல
நான்பயந்து அலைதுரும்பாய் அலைகிறேனே
தாகமது தீருமையா தவிக்கும் வேளை
சண்முகனே இதுசமயம் அடியேனுக்கு
மேகமது பயிர்க்குதவி செய்தார் போல
வேலவனே பிராணபயந் தீருமையா
வேகமுடன் வரவேணும் பழநிவேலா
வினைதீர்த்து உயிர்காத்து ரட்சிப்பாயே ! 7

பூனைகையில் சிக்கியதோர் கிளியைப்போல
புலம்புகிறோம் பிராணபயம் மிகவுமாகி
நானடிமை உனைநம்பி யிருக்கும் வேளை

நாயகனே பாராமுகமாய் இருக்க லாமோ
மானீன்ற வள்ளியம்மை தெய்வயானை
மணவாளா சரவணனே கருணை செய்வாய்
கானமயில் வாகனனே பழநி வேலா
கடவுளே உயிர்காத்து ரட்சிப்பாயே ! 8

தூண்டிலகப்பட்ட உயிரது போல் துடிக்கிறேனே
சுப்பிரமணியா இதுசமயம் அடியேனுக்கு
வேண்டும்வரம் கொடுப்பதற்குப் பார்த்து நீயே
வேறொரு வரில்லையென்று நம்பினேனே
மீண்டுவரும் வினைதீர்த்து துயரம் தீர்ப்பாய்
வேலவனே சூரசங்கார வேலா
ஆண்டவனே உனைப்பணிந்தோம் பழநிவேலா
அடியார்கள் உயிர்காத்து ரட்சிப் பாயே ! 9

நஞ்சுபட்டு விஷமேறி மயங்கு மாப்போல்
நடுநடுங்கி கிடுகி டென்று  பயந்து நாங்கள்
தஞ்சமென்றே உனைப்பணிந்தோம் தணிகை வாசா
சற்குருவே பிராணபயந்  தீரு மையா
பஞ்சகனைச் சிறைவிடுத்துத் தலையை வாங்கி
பரிகரித்து உன்னிருதாள் பதமே தந்து
வஞ்சனைகள் செய்யாமல் பழநிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே ! 10

அத்திமுகனே முக்கண்ணனுக்கு இளைய வேலா
அறுமுகனே தணிகையிலே அமர்ந்த வாசா
வித்திறத்திற் பேசாத மூடன் நானும்
வேலவனே நின்னருளால் கவியைப்போல
பத்துமே பதிகமாய்ப் பாடிச் சொன்னேன்
என்மீதில் பிழைகள்மனம் பொறுத்தே யாள்வாய்
சத்தியமாய் உனைப்பணிந்தோம் எங்கள் அய்யா
சண்முகனே அடியாரை ரட்சிப் பாயே ! 11

***

# செந்தில் வளர் கந்தன்

முருகா முருகா வேல்முருகா
முருகா முருகா வேல்முருகா

சந்தமிகு செந்தமிழில் மாலை தொடுத்தேன்
செந்தில் வளர் கந்தனிடம் தூதுவிடுத்தேன்
அந்தமிகு குகன்நெஞ்சில் இடம் பிடித்தேன்
ஆறுமுகன் பேரழகைப் படம் பிடித்தேன் (முருகா) 1

வண்ணமயில் வாகனத்தில் வேல் முருகன்
வள்ளி தெய்வயானையுடன் மால் மருகன்
தென்னகத்தில் வாழுகின்ற சிலையழகன்
என்னகத்தில் காட்சிதந்தான் கலை அழகன் (முருகா) 2

வெண்ணீறு நெற்றியிலே பளபளக்க
வெண்ணிலவு கண்களிலே சிலுசிலுக்க
பன்னீரும் மார்பினிலே கமகமக்க
பார்வதியின் பாலன் வந்தான் மனம் களிக்க (முருகா) 3

ஓராறு முகம் கண்டேன் உள மகிழ்ந்தேன்
ஈராறு விழி கண்டேன் எனை மறந்தேன்
சீராளன் உருக்கண்டேன் செயலிழந்தேன்
செந்தாமரைப் பதத்தில் சரணடைந்தேன் (முருகா) 4

முருகா என அழைத்தேன் முறுவல் கண்டேன்
குமரா என அழைத்தேன் குளுமை கொண்டேன்
கந்தா என அழைத்தேன் கனிந்து நின்றான்
கடம்பா என அழைத்தேன் கருணை கொண்டான் (முருகா) 5

பழநி பரங்குன்றம் திருச்செந்தூர்
பழமுதிர் சோலையுடன் சுவாமி மலை
அழகிய திருத்தணிக்கை மருதமலை
ஆலயங்கள் யாவையும் காட்டுவித்தான் (முருகா) 6

தங்கரதம் ஒன்று இங்கு அசைந்து வரச்
செந்தில் வளர் கந்தனுமே கொலுவிருக்க

நங்கை மலர் தெய்வானை வள்ளியுடன்
நான் வணங்கும் திருக்கோலம் காணுங்களேன் (முருகா) 7

தேவரெல்லாம் கூடி நின்று வடம் பிடிக்க
தென்பழநி வலம் வரும் தங்கரதமாம்
தங்கரத மீதமர்ந்து கொலுவிருக்கும்
தண்டபாணித் தெய்வமே சரணமய்யா (முருகா) 8

பன்னீரும் சந்தனமும் பாற்குடமாம்
பஞ்சாமிர்தம் விபூதி அபிஷேகம்
கொஞ்சு தமிழ் பாலனுக்குப் பழநியிலே
கோடிக்கண்கள் வேண்டுமய்யா காண்பதற்கே (முருகா) 9

காவடிகள் உன்னைத் தேடி ஆடிவரும்
கால்நடையாய் பக்தர் கூட்டம் கோடிவரும்
சேவடியே சரணமென வாழ்பவர்க்கே
செல்வநலம் தந்தருளும் கந்தவேளே (முருகா) 10

கொக்கரக்கோ சேவல் ஒன்று கூவி வர
கோலமயில் நின்று நடமாடி வர
சுப்பையா நானடிமை பாடிவர
சொக்கன் மகன்நீ அதனைக் கேட்டுவர (முருகா) 11

***

## ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே (ஆடுக) 1

ஆழிப் படுக்கை கொண்டோனின்
அருமை மருகா ஆடுகவே
ஊழி தாண்டி நிற்பானின்
உத்தமச் செல்வ ஆடுகவே (ஆடுக) 2

வாழும் மனிதர் யாவருக்கும்
வழிக்குத் துணையாம் வேலவனே

ஆளும் கவலை ஓடிடவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக) 3

ஆடகப் பொன்னால் ஊஞ்சலிட்டு
அதற்கு வயிரக் கயிறுமிட்டு
கூடிடும் அடியார் ஆட்டிடவே
குமரா ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக) 4

பாடுகள் குறைந்தே மாந்தரெல்லாம்
பண்பாய் வாழ்ந்து உயர்ந்திடவே
வாடிடும் பயிர்கள் வளம் பெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக) 5

முன்னே பின்னே சென்றாலும்
மூளையில் ஒன்றி நின்றிடுமே
என்னே வாழ்க்கை என்றாலும்
எல்லாம் உன்னைச் சுற்றியதே (ஆடுக) 6

குன்றாக் குடியாய் எமைகாக்கும்
குன்றக் குடியின் வேலவனே
கண்ணே மணியே கதிர்வேலா
கவினார் ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக) 7

விண்ணவர் செல்வி தெய்வானை
வேடவர் மகளாம் வள்ளியுடன்
மண்ணகம் சுற்றும் மயிலேறி
மேதகு சேவற் கொடியாட (ஆடுக) 8

கொண்டிடுங் காதல் உணர்வோடு
கனிந்த நெஞ்சத் தூஞ்சலிலே
அன்புடன் ஏறி இனிதமர்ந்தே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக) 9

மண்ணைப் பிளந்து பெரும்பேட்டில்
மாபெரும் அருளுடை வடிவுடனே
பெண்ணின் நல்லார் இருவருடன்
பெருமயில் ஏறி வந்தவனே (ஆடுக) 10

கண்ணே தெரியாக் காட்டிடையே
கலங்கித் தவிக்கும் எங்களுக்கே

உன்னால் வழியும் தெரிந்துயர
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக) 11

ஆறடி நெடிதாம் உருவுடனே
அடியார்பக்தி உறுவேற
பேரருள் கொண்டாய் பெரும் பேடா
பிள்ளைகள் நலிவினைப் போக்கிடவே (ஆடுக) 12

சீரடி வணங்கிட வந்துள்ளோம்
செல்வா அருளைத் தந்திடுவாய்
ஆரிருள் விலகி ஒளிபெறவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே (ஆடுக) 13

***

## ஆடுக முருகா ஆடுகவே
## ஐயா முருகா ஆடுகவே

பிறவிகள் ஆயிரம் எடுத்தாலும்
பெரும்பகை வாழ்வில் முளைத்தாலும்
திரவியம் எனக்கு நீதானே
தினமுன்னை நினைத்திட ஆடுகவே! (ஆடுக) 1

உற்றவர் உறவினர் சொந்தங்கள்
உலகில் ஆயிரம் இருந்தாலும்
நற்றமிழ் செல்வா என்வாழ்வில்
நல்வழி காட்டிட ஆடுகவே! (ஆடுக) 2

கரங்கள் இருப்பது உனைத் தொழவே!
கால்களின் வேலை பழனிநடை
உறங்கும் வேளையும் மனதினிலே
உறைந்திடும் வேலா ஆடுகவே! (ஆடுக) 3

பிள்ளைகள் கல்வியில் சிறந்திடவே
பெரும்பெரும் பதவிகள் அடைந்திடவே
தொல்லைகள் இல்லா வாழ்வுபெற
துயரம் நீங்கிட ஆடுகவே! (ஆடுக) 4

எத்தனை எத்தனை பிறவிகளை
என்னுயிர் உலகில் எடுத்தாலும்
அத்தனை அத்தனை பிறவியிலும்
அன்புடன் காத்திட ஆடுகவே! (ஆடுக) 5

சோதனை எந்தன் வாழ்க்கையிலே
சுற்றி சுற்றி அடித்தாலும்
வேதனை தீர்த்திட நீயிருக்க
வேறென்ன வேண்டும் ஆடுகவே! (ஆடுக) 6

தவறுகள் செய்யா வாழ்பெற
தடமாய் நீ வந்து அமர்ந்திருக்க
எவரும் மதிக்கிற நிலைபெறவே
எந்தன் முருகா ஆடுகவே! (ஆடுக) 7

துவள்கிற வேளையில் தோள் சேர்த்து
தூக்கி நிறுத்திடும் என்தோழா
அவனியில் உனைப்போல் யாருமில்லை
அழகாய் ஊஞ்சலில் ஆடுகவே! (ஆடுக) 8

கோரிக்கை கோடிகள் உனக்கு வரும்
கொஞ்சமும் சலியா மனதோடு
மாரியாய் இன்பம் அனைவருக்கும்
மண்ணில் பொழிந்திட ஆடுகவே! (ஆடுக) 9

காலனும் என்னைத் தொடுமுன்னே
கடமைகள் எல்லாம் முடித்திடவே
வேலா உன்னைச் சரணடைந்தேன்
வேண்டும் வரம்தந்து ஆடுகவே! (ஆடுக) 10

– அழ. அருணாசலம், கண்டவராயன்பட்டி

***

# வீரவேல் வெற்றிவேல் வேல் வேல்

சுட்டதிரு நீறெடுத்துத் தொட்டகையில் வேலேடுத்து
தோகைமயில் மீதமர்ந்த சுந்தரம் – அந்தக் (வேல்வேல்)
கட்டழகு கொண்டதொரு கந்தவடி வேலவனைச்
சாற்றுவது ஆறெழுத்து மந்திரம் (வேல்வேல்) 1

ஆறெழுத்து மந்திரத்தைத் தந்ததொரு சுந்தரத்தை
அந்திபகல் சிந்தனைசெய் நெஞ்சமே – அந்த (வேல்வேல்)
ஆறெழுந்து மந்திரத்தை யாரெடுத்து ஓதினாலும்
ஆறுமுகம் வந்துநிற்கும் முன்னமே (வேல்வேல்) 2

கந்தனடியே நினைந்து சங்கத்தமிழ் மாலைகொண்டு
வந்தனை செய்வோர்கள் மனம் ஆறுமே –பரங் (வேல்வேல்)
குன்றுவளர் குகனோடு தங்கிவரவே நமக்குள்
பொங்கிவரும் செல்வம் பதினாறுமே (வேல்வேல்) 3

## ஆண்டி உடையில் அரசன்

பக்கமிரு மாதிருக்கச் சொக்கவெள்ளி வேலெடுத்துப்
பச்சைமயில் உச்சிவரும் வேலனே ! – உன்றன் (வேல்வேல்)
பஞ்சடியை நெஞ்சமுத்திப் பாற்குடத்தைத் தோளெடுத்தால்
அஞ்சிமிகக் கெஞ்சிடுவான் காலனே (வேல்வேல்) 4

பழநிமலை மீதமர்ந்து பாட்டமுதை வேட்டருந்திப்
பாருலகை காத்தருளும் கந்தனே ! – உன்றன் (வேல்வேல்)
பால்வடியும் பூ முகத்தை நாள்முடியப் பார்த்திருந்தால்
வேல்முடித்து வைத்துவிடும் பந்தமே (வேல்வேல்) 5

ஆறுபடை வேலவனும் ஏறுமயில் மீதெழுந்தால்
கூறுமடி யார்வினைகள் மாறுமே – அந்த (வேல்வேல்)
ஆறுமுக வேலவனை ஆண்டியுடை கொண்டவனைப்
பழநிமலை மீதுவந்து பாருமே (வேல்வேல்) 6

ஆண்டியுடை கொண்டிருந்தும் அரசமனம் கொண்டவனை
அண்டியதும் நொண்டிவிடும் துன்பமே – அவன் (வேல்வேல்)
ஆறெழுத்து மந்திரத்தின் ஓரெழுத்தை ஓதிடினும்
பாரனைத்து பெற்றுயரும் இன்பமே (வேல்வேல்) 7

–டாக்டர் அர.சிங்காரவடிவேலன்

# கொஞ்சுதமிழ்ப் பாமலை (வேல் வேல்)

கொஞ்சுதமிழ்ப் பாமலைக்கும் நெஞ்சமெனும் பூமலைக்கும்
கோலமயில் ஏறிவரும் வேலவன் – அந்தப் (வேல்வேல்)
பிஞ்சுமன வேலவனைச் சஞ்சலம் தீர்மூலவனைப்
பேசுவது ஆறெழுத்து மந்திரம் (வேல்வேல்) 8

வெள்ளமெனப் பாடிவரும் வேலவனை நாடிவரும்
வெற்றிமிகு மாந்தரது கூட்டமே – தினம் (வேல்வேல்)
கள்ளமிலா உள்ளமெல்லாம் மெள்ள மெள்ள ஓடிவரக்
கால்நடையில் புள்ளிமயில் ஆட்டமே (வேல்வேல்) 9

சாலையிலே தூங்குவதும் காலையிலே தாங்குவதும்
சண்முகனுக் கேற்றதொரு காவடி – நம் (வேல்வேல்)
வேலையெல்லாம் விட்டுவிட்டுக் காலைபகல் மாலையெல்லாம்
வீரநடை போடுவதும் சேவடி (வேல்வேல்) 10

பள்ளயங்கள் போடுவதும் பந்தயமாய் ஓடுவதும்
பாலனுக்குப் போட்டதொரு பாலமே– தினம் (வேல்வேல்)
துள்ளிவரும் வேலெடுத்துப் புள்ளிமயில் வாகனுக்குத்
தோலுரியக் கால் நடக்கும் சீலமே (வேல்வேல்) 11

தாங்குவதும் தூங்குவதும் தாளெடுத்துப் போடுவதும்
தந்தினத்தோம் போடுகின்ற தாளமே – தினம் (வேல்வேல்)
சங்குமுகம் பாடுவதும் சிங்கமுகன் ஓடுவதும்
சண்முகனுக் கேற்ற தொரு மேளமே (வேல்வேல்) 12

ஆண்டியென உள்ளவனும் தூண்டிலிலே வந்திடுவான்
ஆறுமுக சாமியினைப்பாடு – அவன் (வேல்வேல்)
கண்டிக்கதிர்காமமுடன் அண்டியவர் உள்ளமெல்லாம்
காத்திருப்பான் ஆறுபடை வீடு (வேல்வேல்) 13

சாமிமலை பழனிமலை சார்ந்ததொரு தணிகைமலை
சண்முகவி லாசமெனக் கூறு – இந்த (வேல்வேல்)
பூமியிலே உள்ளவர்கள் சாமியெனப் போற்றிநிதம்
பூசுவதும் ஆறுமுகன் நீறு (வேல்வேல்) 14

பாரி வளம் மீறிவரப் பக்தரெல்லாம் கூடி வர
பழமுதிரும் சோலையை நீ பாடு – தினம் (வேல்வேல்)
ஊறிவரும் பக்தியிலே ஏறிவரும் சக்தியினால்
உயர் அழகர்மலையினையே நாடு (வேல்வேல்) 15

– பொற்கிழிக் கவிஞர் காசி ஸ்ரீ அரு.சோ

# நலம் தரும் நாயகன்

வேல்முருகா வேல் வேல்
வேல்முருகா வேல் வேல்
வேல் முருகா வேல் முருகா வேல் முருகா வேல்வேல்

தென்பழனி ஆலயம் தேவதேவன் கோபுரம்
அன்பழகன் சந்நிதியில் வைபோகம் – அவன்
அடியார்கள் கொண்டாடும் தைப்பூசம் (வேல் முருகா) 1

ஆறெழுத்து மந்திரம் அங்கமெல்லாம் சந்தனம்
நீறெடுத்துப் பூசிவரும் திருக்கூட்டம் – அதன்
நெஞ்சமதில் ஆடிவரும் சதிராட்டம் (வேல் முருகா) 2

ஆலவட்டம் தோரணம் அன்னதானம் பானகம்
காலெடுத்து வைக்க வைக்க உபசாரம் – இது
கந்தவேலன் தண்டபாணி தரும்யோகம் (வேல் முருகா) 3

வேல்முருகன் சேவடி வேண்டிவரும் காவடி
பால்குடங்கள் பன்னீரும் அபிஷேகம் வண்ணப்
பட்டாடை நவரத்ன அலங்காரம் (வேல் முருகா) 4

கற்பூர தீபமாம் கண்கவரும் ரூபமாம்
தற்பரனாய் நிற்பவனே நம்தெய்வமாம் – அந்த
சரவணனைப் பாடுவதே பேரின்பமாம் (வேல் முருகா) 5

பழனிமலை வாசனே பஞ்சாமிர்த நேசனே
அழகுமயில் வாகனத்தில வருவாயப்பா எங்கள்
அல்லல்களைப் போக்கி நலம் தருவாயப்பா (வேல் முருகா) 6

ஆறுபடை வீடுகள் அழகுமலை நாடுகள்
ஏறுமயில் ஏறுபவன் அரசாங்கமாம் அவன்
இசைபாடி ஆடுபவர் புகழோங்குமாம் (வேல் முருகா) 7

தேவயானை திருமணம் தேவர்தரும் சீதனம்
பாவாணன் நக்கீரன் அருட்கவிமன்றம் முதல்
படைவீடு மதுரையிலே திருப்பரங்குன்றம் (வேல் முருகா) 8

வடிவேலை வீசுவான் வாகைமலர் சூடுவான்
அடியார்கள் புலவோர்கள் நெஞ்சில் வாழ்பவன் அவன்
அலையாடும் கடலோரம் செந்தில் ஆண்டவன் (வேல் முருகா) 9

தண்டாயுதம் ஏந்துவான் ஜபமாலை தாங்குவான்
கொண்டாடும் கவிமாலை அடிசூடுவான் எழில்
கூத்தாடும் பழநியிலே குடியேறுவான் (வேல் முருகா) 10

சிவஞான சுந்தரம் செவியோடு மந்திரம்
உபதேசக் குருநாதன் சாமிநாதன் அவன்
உலகாளும் சக்தி சிவ காமிபாலன் (வேல் முருகா) 11

அடிவாரம் மாமனாம் மலைமேலே மருகனாம்
இடையினிலே ரகுமான் உறவினர்சேனை அது
எம்பெருமாள் விளையாடும் பழமுதிர்சோலை (வேல் முருகா) 12

வள்ளிமலை வடமலை மருதமலை சிவமலை
கொல்லிமலை பொதிகைமலை பற்பலமலைகள் ஐயா
குமரமலை தணிகை மலை கற்பகச்சுனைகள் (வேல் முருகா) 13

தண்ணீர்மலை முருகனே தைப்பிங்கில் குமரனே
கண்ணபிரான் மருமகனே கதிர்காமனே ஏழு
கடல்தாண்டி லண்டனிலே சிவபாலனே (வேல் முருகா) 14

போதுமய்யா சோதனை பொறுக்கவில்லை வேதனை
ஆதரித்துக் காப்பாற்றத் தாமதமேனோ என்
அல்லல்வினை நோய் உனக்குச் சம்மதம்தானோ (வேல் முருகா) 15

ஆறுமுக வேலனே அழகுமயில் வீரனே
ஏறுமுகம் நீதருவாய் பழநி மலையிலே இனி
எப்போதும் துணைவருவாய் எமது வழியிலே (வேல் முருகா) 16

வைத்தீசன் மைந்தனே வயலூரில் கந்தனே
தைப்பூசம் காணவந்தோம் தண்டபாணி நீ
தங்கரதம் ஏறவேண்டும் எங்கள்சாமி (வேல் முருகா) 17

அருணகிரி தோழனே அடியவர் சகாயனே
சரணம் உன்னை அன்றி இல்லை சண்முகநாதா துணை
தந்துமனை மக்கள்சுற்றம் எம்குலம்நீகா (வேல் முருகா) 18

***

# ஆறுபடை வீடழகா

ஆறுபடை வீடழகா முருகா
ஆனந்தனே மால்முருகா - (வேல் வேல்)
அழகுமயில் ஆடிவரச் சேவல்கொடி முன்னே வர
இன்னும் வரத் தாமதமேன் - முருகா
இன்னும் வரத் தாமதம் ஏன் ? (முருகா) 1

ஏறுமயில் ஏறிவந்தே - முருகா
எங்கள் குறை தீர்ப்பவனே (வேல் வேல்)
கூறுவினை தீர்த்து வைக்கக் கோலமயில் ஏறி நீயும்
இன்னும் வரத் தாமதமேன் (முருகா) 2

குன்றக்குடி வேலவனே - முருகா
குறைகளெல்லாம் தீர்ப்பவனே (வேல் வேல்)
குன்றம் விட்டு நீ இறங்கித் தஞ்சமென்றோர் தாழ்வகற்ற
இன்னும்வரத் தாமதமேன் (முருகா)3

எட்டுக்குடி வேலவனே - முருகா
எங்கள் குலம் காப்பவனே (வேல் வேல்)
செட்டி மகன் ஆனவனே செங்கதிர் வேல் நீ எடுத்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா) 4

செந்தூரில் வாழ்பவனே - முருகா
செல்வ நலம் தருபவனே (வேல் வேல்)
எங்கள் குறை தீர்த்திடவே தங்கரத மீதமர்ந்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா) 5

பழனிமலைப் பேரரசே - முருகா
பாரெல்லாம் ஆள்பவனே (வேல் வேல்)
பக்தர் குறை தீர்த்திடவே பச்சைமயில் மீத மர்ந்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா) 6

சிங்கார வேலவனே – முருகா
சிக்கலெல்லாம் தீர்ப்பவனே ( வேல் வேல் )
தங்கமனம் கொண்டவனே தாழ்வகற்றி வாழ்வுதர
இன்னும் வரத் தாமதமேன் ( முருகா ) 7

பன்னிருகை நாயகனே – முருகா
பக்கத்துணை வருபவனே ( வேல் வேல் )
பக்கமிரு மாதிருக்கச் சொக்கத் தங்கவேலெடுத்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா) 8

காவடிகள் ஆட்டத்திலே – முருகா
கவலையெல்லாம் தீர்ப்பவனே (வேல் வேல் )
சேவடிகள் சரணமென ஆவலுடன் காத்திருக்கோம்
இன்னும் வரத் தாமதமேன் (முருகா) 9

சொந்தமுடன் நானழைக்க – முருகா
கந்தவடி வேலவனே ( வேல் வேல் )
தங்கரதம் கொண்டவனே எங்கள் குலம் காப்பவனே
இன்னும் வரத் தாமதமேன் (முருகா) 10

கொஞ்சு தமிழ் பாடல் கேட்கும் – முருகா
குழந்தை வடிவேலவனே ( வேல் வேல் )
தஞ்சமென்றே தாள் பணிந்தோம் பஞ்சம் பிணி போக்கிடவே
இன்னும் வரத் தாமதமேன் (முருகா)11

சொன்ன தமிழ்க் குறையுளதோ – முருகா
சொன்னதெல்லாம் கேட்கலையோ ( வேல் வேல் )
அன்னை தந்த வேல் எடுத்து அழகு மயில் மீதமர்ந்து
இன்னும் வரத் தாமதமேன் (முருகா) 12

அலையாடும் செந்தூரிலே முருகா நின்று
விளையாடும் செல்வ மகனே (வேல் வேல்)
நிலையான செல்வந் தந்து வளமான வாழ்வுதர
வரவேணும் எந்தனருகே (முருகா) 13
(முருகா வரவேணும் எந்தனருகே)

***

# ஸ்ரீ பழநியாண்டவர் திருப்பதிகம்

வேல் முருகா, வேல் முருகா, வேல்முருகா, வேல் வேல்
வேல் முருகா, வேல் முருகா, வேல்முருகா, வேல் வேல்

மோதகம் நிவேதனம் : மூஷிகம் உன் வாகனம் :
முறங்கள் போல் செவித்தலம் : வரம் கொடுக்கும் ஐங்கரம் :
போதகம் : கஜானனம் : புராணஞான வாரணம் :
போற்றி போற்றி உன்பதம் காக்கவேண்டும் என்குலம்! (வேல்முருகா)1

வேல்பிடித்த கையிலே, செங்கோல்பிடித்து நின்றவா
வேண்டிவந்த யாவையும் விரைந்தளிக்கும் மன்னவா
கால்பிடித்தேன் : என்மனக் கலக்கம் நான் உரைக்கவா ?
கண்திறக்க வேண்டும் வேண்டும் தென்பழநீ ஆண்டவா (வேல்முருகா)2

எனது பக்கம் நீயிருக்க எங்கிருந்து பகைவரும்
நானிருந்த மனைநடுங்க எவ்விதம் துயர்வரும் ?
மனது நொந்து நொந்து வந்த மைந்தனை நீ தாங்கவா
வாழிவாழி தென்பழநிக் கோவில் கொண்ட ஆண்டவா (வேல்முருகா)3

ஆதிநாளில் சூரனை அழித்ததெய்வம் நீயெனில்
அடுத்துவரும் பகையெல்லாம் முடித்ததுண்மை தான் எனில்
மோதி நிற்கும் என்பகை முடிக்கவேல் எடுத்துவா
முருகனே தென் பழநிகொண்ட அழகனே என் ஆண்டவா (வேல்முருகா)4

பன்னிரண்டு கைத்தலத்தில் பளபளக்கும் ஆயுதம்
பாய்ந்து செல்லத் துடிதுடிக்கும் பச்சைமயில் வாகனம்
இன்னல் செய்யும் பகைமுடிக்க இன்னும் என்ன தாமதம் ?
என்னையாளும் மன்னனான தென்பழநி ஆண்டவா (வேல்முருகா)5

ஈசனே உன் மனைவிபேரும் தேவசேனை என்கிறார்!
இன்னொருத்தி விழியிரண்டும் ஈட்டியென்று சொல்கிறார்!
வாசம் செய்யும் இடமெலாமுன் பாசறைகள் அல்லவா ?
மைந்தனே என் பகைமுடிப்பாய் தென்பழநி ஆண்டவா! (வேல்முருகா)6

எம்பிரானே ஒன்பதுபேர் தம்பிமாரை நம்பினேன்!
எனது காவல் இவர்கள் என்று கவிதை பாடிச் சொல்கிறேன்!
நம்பினாரைக் காக்கவேறு நாதன் ஏது சண்முகா ?
நவிலொணாப் பகைமுடிப்பாய் தென்பழநி ஆண்டவா ! (வேல்முருகா)7

ஆறுபடை வீடிருக்க வேறுபடை ஏனடா ?
அழிக்கொணாத கோட்டைநின் சடக்கரங்கள் தாமடா!
மாறிலாத கவசமாய் வரும் சுழன்று வேலடா !
வல்வினை பகைமுடிப்பாய் தென்பழநி ஆண்டவா ! (வேல்முருகா)8

ஆரவாரமாய் எழும் அகப்பகை : புறப்பகை
அறியொணாத மந்த்ரயந்த்ர தந்த்ரமாய் வரும் பகை
வேர்விடும் குலப்பகை வினைப்பகை கிரகப்பகை
வேறுபல் பகை முடிப்பாய் வேள் பழநி ஆண்டவா! (வேல் முருகா)9

எந்த வேளை யானபோதும் கந்தவேளைப்பாடுவேன்!
இந்த வேளை உன்னையன்றி எந்த ஆளைநாடுவேன் !
வந்தவேளை நல்ல வேளை வாகை கொண்ட வேலவா
வன்பகை ஒழித்தருள்வாய் தென்பழநி ஆண்டவா (வேல்முருகா)10

அப்பனே அடைக்கலம் என் ஐயனே அடைக்கலம்
அமரர்கோன் பகைமுடித்த அண்ணலே அடைக்கலம்
எய்ப்பிலே சரண் புகுந்தேன் ஈசனே அடைக்கலம்
என்பகை முடித்தருள்வாய் தென்பழனி ஆண்டவா (வேல்முருகா)11

– அருட்கவி கு.செ.இராமசாமி

***

## படைவீட்டு வேலன்

வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல் வேல்
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல் வேல்

ஆறுமுக வேலவா அழகுமுகம் காட்டவா
ஆனந்தமாய் ஓடிவா அருள் கொடுக்க இங்குவா (வேல் முருகா)

ஆறுபடை நாயகா அழகுமயில் வாகனா
பாருடை பக்தரை பாதுகாக்க நீயும் வா (வேல் முருகா)

பாதமெலாம் நோகுது பழநிமுகம் காணுமுன்
பாதைவழி வேலவா பார்த்துவர நீயும் வா (வேல் முருகா)

வள்ளியம்மை பெண்ணொருத்தி வந்தாள் உந்தன் நாயகி
தெய்வானை தேவியோ தேடிநின்றாள் வீட்டிலே (வேல் முருகா)

ஏனொசென்றாய் வேலவா எங்குசென்றாய் வேலவா
தேடிவரும் பக்தர்குறை ஓடிவந்து காக்கவா (வேல்முருகா)

காவடிகள் ஆடிவரக் கந்தன்மயில் ஆடுது
பாவடிகள் பாடிவந்து பாதைவழி கடக்குது (வேல் முருகா)

கோடிக்கோடி பக்தர்கள் கூடிவந்த யாத்திரை
நாடிநீயும் ஓடிவந்து நலமே தந்தருளுவாய் (வேல் முருகா)

– வாஸன்ஸ் காபி எஸ்.எம். அழகப்பன்

***

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையும் கைகூடும் நிமலர்
அருள்கந்தர் சஷ்டி கவசந்தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

**நூல்**

**நிலை மண்டில ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்

பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று உவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகம் நீயும் தனியொளி ஓவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்

பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகு டிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச்செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல்காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தால் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்(து) ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும்அஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள்எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மா மலையுறும் செங்கல்வராயா

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யான் உனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம்பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் முருகா
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பஃு உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்று அடியார் அழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜபித்து உகந்து நீறணிய

அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலஷ்மிகளில்
வீரலக்ஷ்மிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று

***

# தங்கத்தேரில் வாவா

கோரஸ்: வேல்வேல் வேல்வேல் வேல்முருகா வேல்
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்

ஆடிபாடி உன்னைத்தானே தேடிவாரோமே
அரோகரா என்று சொல்லி பாடிவாரோமே!
தேடி வந்தோர் வாழ்க்கையிலே நலங்கொடுத்திடும்
தண்டபாணித் தெய்வமே தங்கத்தேரில் வாவா! (வேல் வேல்) 1

பார்புகழும் பழனிமலை ஆண்டவனே வா
பரங்குன்றப் பேரழகே வேலெடுத்து வா
சீர் மேவும் சரவணையில் தவழ்ந்தவனே வா
சிங்கார வேலவனே தங்கத் தேரில் வாவா! (வேல் வேல்) 2

வண்ணமயில் கொண்டவனே வா வா வா
வடிவழகே திருமுருகே ஓடோடி வா
எண்ணமெல்லாம் நிறைந்தவனே வா வா வா
எழில் நிலவே தங்கத்தேரில் ஏறிநீயும் வாவா! (வேல் வேல்) 3

பிரணவத்தின் பொருள் உரைத்துப் பெருமைகொண்டவா
திறமைமிகு சூரர்படை வென்று வந்தவா
அருணகிரி பாட்டினிலே அகமகிழ்ந்தவா
அன்பரெல்லாம் மகிழ்ந்திடவே தங்கத்தேரில் வாவா! (வேல் வேல்) 4

ஆறுமுகம் ஆகிவந்த வேலவனே வா
அன்பருள்ளம் கோயில் காணும் ஆனந்தனே வா
கூறும் வினை தீர்த்துவைக்க வேலெடுத்துவா
குன்றம் கண்ட தண்டபாணி தங்கத்தேரில் வாவா! (வேல் வேல்) 5

காவடிக்கு வழித்துணையாய் வேலைத்தந்த வா
கடம்பனோடு இடும்பனையும் காவல் தந்த வா
ஆடிவரும் காவடியைக் காணவேண்டாமா?
அழகுமுகம் காட்டி இங்கே சிரித்து மகிழ வாவா! (வேல் வேல்) 6

ஆடிவரும் காவடிக்குள் சேர்ந்துவருபவன்
அழகுமுகம் காட்டி அங்கே சிரித்து நிற்பவன்
அருளாடி உருவினிலே காட்சி தருபவன்
அவரோடு தனிமையிலே பேசிப் பேசி மகிழ்பவன் (வேல் வேல்)7

குட்டைய்யயா குடும்பத்திலே சொந்தம் கொண்டவன்
கும்பிட்டோர் நலம்காக்கப் பிரம் பெடுப்பவன்
பிரம் பெடுத்து ஆடுகின்ற பேரழகே வா
பெருமை சொன்னோம் தண்டபாணி தங்கத்தேரில் வா வா!

(வேல் வேல்)8

உன்னருளால் வாழ்வதிலே பெருமை கொள்கிறோம்
உன்வாசல் வருவதில் சுகமும் காண்கிறோம்
எண்ணமெல்லாம் நிறைந்தவனே எழில் முருகே வா
வண்ணமயில் விட்டிறங்கித் தங்கத்தேரில் வா வா! (வேல் வேல்)9

பழத்துக்காக சண்டை போட்டுப் பழனி சென்ற வா
அவ்வைப் பாடலுக்கே பழமும் தந்து ஊதச் சொன்னவா
அள்ளித்தரும் வள்ளலே என் செந்திலாண்டவா
ஆனந்தமாய் வேல் பிடித்துத் தங்கத்தேரில் வா வா! (வேல் வேல்)10

உன்னழகைக் காண்பதற்கே ஓடி வருகிறோம்
உன்னருளைப் பெறுவதற்கே தேடி வருகிறோம்
வண்ணமயில் ஏறிவரும் வடிவழகே வா
அன்னை தந்த வேலுடனே தங்கத் தேரில் வா வா! (வேல் வேல்)11

அன்னையவள் மீனாட்சி வாழ்த்தி மகிழ்கிறாள்
அப்பன் மதுரைச் சொக்கேசன் பெருமை கொள்கிறார்
தேவர்மகள் தெய்வயானை மெல்ல சிரிக்கிறாள்
தினைப்புனைத்து வள்ளிமயில் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறாள்
(வேல் வேல்)12

***

# பழநிப் பதிகம்

ஒரு கனியை கணபதியே பெற்ற தாலே
உடன்கோபம் கொண்டவனே பழநி வேலா
பெருந்துயரம் தினம்பெருகி வந்த போது
பிறவொன்றும் எண்ணாது நானும் உன்றன்

திருவடியே சரணமெனப் பற்றிக்கொண்டேன்
சிறியேனுக் கருள்புரிந்து காக்க வேணும்
இருமாதர் புறமாடும் தங்க வேலா
ஏறுமயில் மீதேறிக் காக்க வாவா! 1

தைமாதத் திருநாளாம் பூசத் தன்று
தனிப் பழநி மலைமீது உன்னைக் காணக்
கைவீசி நடைபோட்டுக் கால்கள் கெஞ்சக்
கவின்தமிழிற் பாட்டிசைத்து வந்தேன் யானும்

ஐயாஉன் திருவடியைச் சுற்றும் என்றன்
அச்சமது தீர்த்துநலம் காக்க வேணும்
கைவேலால் பகையோட்டும் பழநி வேலா
கானமயில் மீதேறிக் காக்க வாவா! 2

ஆலைவாயில் கரும்பாகி நித்தம் நித்தம்
அடியேனும் அல்லலுற்றேன் ஆனால் உன்றன்
வேலைநானும் வணங்காமல் இருந்த துண்டோ
வீடுதந்து வினைஅகற்றி அருளும் என்றன்

கோலவடி வேலவனே அடியேன் செய்த
குற்றமெல்லாம் பொறுத்தருள வேணும் ஐயா
ஆலவாயன் திருமகனே பழநிவேலா
ஆடுமயில் மீதேறிக் காக்க வாவா! 3

பகையோட்டி நலங்கூட்டும் பழநி வேலா
பாடிவரும் அடியேனைக் காக்க வாவா!
வகையின்றி பலதவறு செய்த என்னை
வழிநடத்தி கரைசேர்க்க வேணும் நீயே

சிகைமீது பிறைசூடும் ஈசன் காதில்
தென்சாமி மலைவீட்டில் வேதம் ஓதும்
நகைதவழும் முகங்கொண்ட சாமி நாதா
நாகமயில் மீதேறிக் காக்க வாவா! 4

சுடரொளியே அருட்கடலே பழநி வேலா
சுட்டபழம் ஔவைக்கு தந்த பாலா
இடரென்று வருமடியார் துன்பம் எல்லாம்
இனியில்லை என்றாகி வைத்துப் பின்னும்

உடல்நலமும் உளநலமும் அருளும் தெய்வம்
உனையன்றி இப்புவியில் யாரும் இல்லை
படையாறு வீடுகொண்ட பழநி வேலா
பச்சைமயில் மீதேறிக் காக்க வாவா! 5

அலைமீது பட்டசிறு துரும்பைப் போல
அடியேனின் உள்ளமெனும் சின்ன வீட்டை
அலைபோல துன்பமெல்லாம் கூடிவந்தே
ஆட்டிவைத்துத் துயர்பெருக்கும் தன்மை மாற்றும்

நிலையான ஒருதெய்வம் நீயே என்ற
நினைவோடு உனைத்தேடி வந்தேன் ஐயா
அலையோரம் வீடுகொண்ட செந்தூர் வேலா
அழகுமயில் மீதேறிக் காக்க வாவா! 6

புரமெரித்தோன் புத்திரனே பழநி வேலா
புவியாளக் குன்றேறி நிற்கும் பாலா
வரம்பின்றிப் பலதவறு செய்தபோதும்
மனமுருகி ஒருநினைவாய்த் தொழுது பின்னர்

கரங்குவித்து வந்தவரைக் காக்கும் தெய்வம்
கதிர்வேலா நீயென்றே அறிந்து வந்தேன்
பரங்குன்றில் ஒருவீடு கொண்ட வேலா
பவளமயில் மீதேறிக் காக்க வாவா! 7

அருள்தந்து காக்கின்ற பழநி வேலா
அருணகிரி தனைப்பாட வைத்த வேலா
நெருப்புற்ற மெழுகாகித் துவளும் நானும்
நெஞ்சிலுறு துன்பமெல்லாம் நீங்க வேண்டித்

தெருவோரம் நடைபோட்டு வந்த என்றன்
செப்புமொழி கேட்டருள வேணும் ஐயா
முறுவலுறு முகங்கொண்ட தணிகை வேலா
முத்துமயில் மீதேறிக் காக்க வாவா! 8

பழகுதமிழ்ப் பண்டிதனே பழநி வேலா
பனிபடர்ந்த சிறுபுல்லாய் அடியேன் நானும்
பலவினையால் துயருற்றேன் அதனால் நீயும்
பனிநீக்கும் கதிராகிக் காக்க வேணும்

பிழைகளைந்து நலமருள வல்ல தெய்வம்
பிள்ளைவடி வானவனே நீதான் ஐயா
பழமுதிரும் சோலையிலும் வாழும் வேலா
பட்டுமயில் மீதேறிக் காக்க வாவா! 9

இளங்கன்று பயமின்றித் துள்ளும் போதும்
இணையாகத் துணைபோகும் பசுவைப்போல
உளத்தாலே இளங்கன்றே சிறியேன் யாமும்
ஒரு கோடி தவறிழைத்தேன் ஆன போதும்

வளந்தந்து தீதகற்றி அடியேன் என்றன்
வழிநடைக்குத் துணைவந்து காக்க வேணும்
இளமாதர் புறமாடும் தங்க வேலா!
ஏறுமயில் மீதேறிக் காக்க வாவா! 10

❋❋❋

மீ. சேவுகன் செட்டி

# தென்பரங்குன்றம் அரோகரா

வேலாவா கந்தாவா குமரா வாவா
மெஞ்ஞானப் பொருளேவா மீனாள் ஈன்ற
பாலாவா எனது கலி துன்பம் தீர
பன்னிரண்டு கண்ணதனால் பார்க்க வாவா 1

சேலாடும் நயனவள்ளி பங்கா வாவா
திருமால் தன் மருகாவா சேவலாய் வாவா
ஆலாலம் உண்ட கண்டன் புதல்வா வாவா
அரகரா தென்பரங் குன்றையா போற்றி 2

வண்டாடும் மலர்சோலை உன்னதானால்
வள்ளியம்மை யெனையீன்ற தாயுமானாள்
தண்டாயுதம் உனது கையில் வேலுமானால்
தெய்வானை யெனை ஈன்ற தாயுமானாள் 3

கொண்டாடும் மாதுகுற வள்ளி தன்னை
கோலமணம் சூட்டிவைத்த குழந்தை யாண்டி
பண்டாரம் நீருமானால் என்னைக் காரும்
பச்சைமயில் வாகனரே பாதம் போற்றி. 4

ஈராறு காதிலே நான்சொன்ன மொழியெலாம்
யெள்ளளவும் கேட்கவிலையோ
இக்கலியுகத்திலே பற்பல கிரியிலே
யென்னென்ன புதுமைசெய்தாய் 5

பாருலகில் பெரியமெய்ஞ ஞானபண் டிதாவுந்தன்
பன்னிருகண் ணில்லையோசொல்
பாவையர்கள் மோகமாய் அருணகிரி செந்தமிழ்
பாட்டுமேல் நினைவுற்றவா 6

தீரனே பொற்கடக மணியுமணி மார்பனே
தேவர்பணி பொற்பாதனே
செட்டி மகனே தங்கக் கட்டி மணியே யிந்த
தந்திரம் செய்யலாமா 7

தீர வொய்யாரா செந்தூரா சங்கரா
சேவற் கொடிக்கதிபா
தேவர்சிறை மீட்டுஞ் செல்வா என் திருமுகம்
பார்த்தருள் தென்பரங்கிரிவேலனே ! 8

***

# காவிரிபோல் வளர்வோம்

அள்ளிக் கொடுப்பதில் வல்லமை பெற்றவன்
அப்பன் பழனியப்பன் – தினம்
அச்சம் தவிர்ப்பவன் – ஆறுதல் சொல்பவன்
அப்பன் பழனியப்பன் 1

கள்ளம் கபடம் இலாதவர் தம்மிடம்
காவலில் நின்றி ருப்பான் – அங்கு
கால்நடை யாய்வரும் மானிட ஜாதியைக்
கண்டுகளித்தி ருப்பான். 2

துள்ளிவரும் வடிவேலுக்கு மேலொரு
ஜோதிப் பிழம்புமுண்டோ? அந்த
சுப்பையன் போலொரு அற்புத தெய்வத்தை
சொல்ல மொழியுமுண்டோ ! 3

வெள்ளிமுகம் பனிரெண்டையும் கண்டபின்
வேறொரு சொர்க்க முண்டோ ? – ஆண்டி
வேஷத்திலாயினும் வீரத்திலாயினும்
வேலனை வெல்வதுண்டோ ! 4

சித்தர் வணங்கிய சேவற் கொடியோனைச்
சேர்ந்து வணங்கிடுவோம் – அந்த
சிக்கலிலாயினும் செந்திலிலாயினும்
சென்று கனிந்து நிற்போம் ! 5

பக்தருக்கென்று திறந்திருக்கும் தென்பழனியைக்
கண்டுகொள்வோம் – அங்கு
பாலாபிஷேகமும் தேனாபிஷேகமும்
செய்து பணிந்திடுவோம் ! 6

செட்டி முருகன் எனும் பெயர்பெற்றவன்
தண்டாயுத மல்லவோ – அந்த
சித்திர வள்ளியும் சாடையில் மற்றொரு
செட்டி மகளல்லவோ ! 7

கொட்டி கொடுப்பவன் கோவிலைப் பார்த்திட
கோஷ மிட்டோடிடுவோம் – முள்ளும்
குத்தட்டுமே கல்லும் தட்டட்டுமே வலி
கொஞ்சமும் கண்டுகொள்ளோம் ! 8

ஆறும் அறுபதும் ஆனஇருபதும்
ஆடிநடந்து செல்வோம் – சில
ஆனந்தப் பாடல்கள் வேலனைப் பாடட்டும்
அன்புடன் ஊர்ந்து செல்வோம் ! 9

ஊறுகள் நேரட்டும் உமையவள் மைந்தனை
உச்சத்தில் வைத்திருப்போம் – கையில்
உள்ளதை அன்னவன் கோவிலுக்கே தந்து
மிச்சத்தில் வாழ்ந்திருப் போம் ! 10

வேலன் குமரன் முருகன் திருச்செந்தில்
வேட்டுவன் கந்தனுக்கு – இரு
கால்கள் நடக்கின்ற நடையினில் தானுயர்
கனிவு நிறைந்திருக்கு ! 11

காலம்வழிவிடும் கச்சிதமாய் சென்று
கால்களிலே விழுவோம் – அவன்
கால்களிலே விழக்கால்கள் நடக்கட்டும்
காவிரிபோல் வளர்வோம் ! 12

– கவியரசு கண்ணதாசன்.

***

## மணிவாசகர் திருவாசகம்

## திருப்பெருந்துறையில் அருளியது

# சிவபுராணம்

(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்த எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவி றுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்ச்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றி புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்துவினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

***

# குமரனுட வேலு இது

குன்றுதோர் ஆடிவரும் குமரனுட வேலுஇது
கூடிவரும் பக்தர்களின் குறைதீர்க்கும் வேலு இது
மயூர வாகனனின் மரகத வேலுஇது
மருதமலைஆண்டவனின் மகத்தான வேலு இது (குன்றுதோர்) 1

கார்போல பொழிகின்ற கார்த்திகேயன் வேலு இது
கூறும்அடி யார்கள்வினை தீர்க்கும் வேலு இது
சங்கடங்கள் தீர்க்கவரும் சண்முகனின் வேலு இது
தண்டனைகள் அகற்றிவிடும் தண்டபாணி வேலு இது (குன்றுதோர்) 2

மேலைச்சிவபுரி தனிலே குடியிருக்கும் வேலுஇது
மன்றம் விளங்கும் மன்னனுடைய வேலுஇது
பழனிமலை நோக்கிப்பறந்துவரும் வேலு இது
கழனியிலே நிற்போரின் கண்துடைக்கும் வேலு இது (குன்றுதோர்) 3

ஊஞ்சலிலே ஆடிவரும் ஓங்கார வேலு இது
மாஞ்சோலை வாழுகின்ற மன்னனுடைய வேலுஇது
அடையாளம் காட்டிநிற்கும் அழகான வேலுஇது
கடையாணி இல்லாமல் கரைசேர்க்கும் வேலுஇது (குன்றுதோர்)4

வையாபுரியோரம் வந்து நிற்கும் வேலுஇது
வாழ்வாங்கு வாழவைக்கும் வடிவேலன் வேலுஇது
எட்டுக்குடி நகர்க்கு எழுந்தருளும் வேலு இது
கட்டிவரும் காவடியில் காட்சி தரும் வேல் இது (குன்றுதோர்) 5

சிக்கல் நகர்தனிலே சிரித்துவரும் வேலு இது.
எக்கலைக்கும் மன்னனான நம் தலைவன் வேலு இது
அண்டிவந்தபேருக்கெல்லாம் அபயமளிக்கும்வேலு இது
கண்டி கதிர்காமத்தோன் கனிவான வேலு இது (குன்றுதோர்) 6

***

# வேல் வேல்

வேல்வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்
நாதாந்த முடிமேல் நான்மறைகள் போற்றும்வேல்
தேவியவள் தந்தவேல் தேவர்மூவர் போற்றும்வேல்
பழனியில் நின்றவேல் பஞ்சாமிர்தம் தந்தவேல்

காளியவள் தந்தவேல் வேலியிட்டுக் காக்கும்வேல்
கண்ணின் மணிகளைக் காத்துநிற்கும் கதிர்வேல்
தேவியவள் தந்தவேல் தேன்மதுரம் சிந்தும்வேல்
சூளியவள் தந்தவேல் சுயம்புலிங்க நாதவேல்

தெய்வயானையைக் கொஞ்சிக் கொஞ்சி நின்றவேல்
வள்ளிக் குறத்தியை அள்ளி அணைத்தவேல்
அம்பிகையின் சொந்தவேல் அம்மையப்பன் பெற்றவேல்
காமாட்சி பெற்றவேல் காசியப்பன் தந்தவேல்

தும்பிக்கையான் தம்பியின் துயர்நீக்கும் சக்திவேல்
காந்தமலை தம்பியின் அண்ணனான வண்ணவேல்
முத்துமாலை தந்தவேல் முத்துசிந்தும் முத்துவேல்
செந்தூர்க்கடல் அலைகள் முத்தமிட நின்றவேல்
மேலைச்சிவபுரியில் நின்றவேல் சக்திவழங்கும் வெற்றிவேல்

***

# அப்பன் பழனி அப்பனடா

கவியரசு கண்ணதாசன்

அப்பன் பழனி அப்பனடா அவன்
அரும் பெரும் திரவியக் கப்பலடா
அற்புதம் காட்டும் தலைவனடா – அவன்
அன்புக்கு பணிசெய்யும் இறைவனடா ! 1

காண்போம் நாம் அவன் படைவீடு – தம்பி
கால்வலி மறந்து நடைபோடு
கண்டால் நமக்கில்லை ஒருகேடு – நீ
காவடி எடுத்து நடமாடு ! 2

வணிகனின் குலத்துக்குத்தாயாவான் – அவர்
வளவினில் ஓடிடும் சேயாவான்
கவிஞர்கள் பாட்டுக்கு வாயாவான் – எங்கு
கடும்பகை கண்டாலும் தீயாவான் 3

ஆண்டிக்குக் பாரடி சாத்துப்படி – நாம்
ஆடிடப் பழனியில் தீர்த்தமடி
வேண்டிடும் வரம்தரும் தீபமடி – இதில்
வேதனையே இலை லாபமடி ! 4

பழனிக்குப் போவதில் சுகம் அதிகம் – அவன்
பார்வையில் நிற்பதில் குணம் அதிகம்
விழுந்து வணங்கினால் வயததிகம் – அந்த
வீரன் தருவான் பணமதிகம் 5

செட்டிமக்கள் இந்தப் பூமியிலே பல
தெய்வத்துக் களித்தது கோடியம்மா
கட்டிய கோவில்கள் ஆயிரமே – அதில்
கந்தனின் கோவில்கள் யாவையுமே ! 6

முருகப்ப னில்லாத ஊருமில்லை ஒரு
முத்தைய னில்லாத வீடுமில்லை
பழனியப்ப னின்றி வம்சமில்லை எங்கள் !
பரம்பரைக் கவனின்றி அம்சமில்லை ! 7

கால்நடைப் பயணத்தில் ஓடிவந்தோம் – உன்
கருணைக்குத் தானுனைத் தேடிவந்தோம்
வேலெமைக் காக்கட்டும் வேலவனே உன்
விழிஎமை காக்கட்டும் நாயகனே 8

***

# அழைக்கட்டுமா !

அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா ! – அந்த
ஆறுமுக வேலவனை அழைக்கட்டுமா !
ஆறுபடைவீட்டோனை அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா
ஆனைமுகன் தம்பியை அழைக்கட்டுமா !
இனிய வடிவேலவனை அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா–அந்த
இடும்பாயுதனை அழைக்கட்டுமா !
ஈராறுகையனை அழைக்கட்டுமா !சாமி அழைக்கட்டுமா !–அந்த
ஈசனுமை பாலகனை அழைக்கட்டுமா !
உள்ளங்கவர் கள்வனை அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா!
அந்த உல்லாச குமரனை அழைக்கட்டுமா !
ஊமைக்குபதேசித்தோனை அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா!
அந்த ஊனமெல்லாம் அழிப்போனை அழைக்கட்டுமா !
எட்டுக்குடி வேலனை அழைக்கட்டுமா சாமி அழைக்கட்டுமா
அந்த எங்கும் நிறை இறையோனை அழைக்கட்டுமா !
ஏறுமயில் வாகனனை அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா
அந்த அன்பர் நேயனை அழைக்கட்டுமா !
ஒப்பில்லா மணியை அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா
அந்த ஓம் என்ற மந்திரத்தை அழைக்கட்டுமா !
ஔவைக்குபதேசித்தோனை அழைக்கட்டுமாசாமி அழைக்கட்டுமா
அந்தக்கருணைக்கடல் அழைக்கட்டுமா !
சிங்கார வேலனை அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா – அந்த
சிவகுருநாதனை அழைக்கட்டுமா !
பக்தர்கள் அனைவரும் அழைக்கட்டுமா ! சாமி அழைக்கட்டுமா – அந்த
பழனியம்பதியோனை அழைக்கட்டுமா !

***

# சிறுவாபுரி முருகன்

சிறுவா புரியில் முருகா உனது
சிந்தை இரங்காதோ ? – நல்ல
சேதி வழங்காதோ – நீ
பெறுவாய் தமிழை ! தருவாய் அருளை
பேரம் சரியிலையோ ? – எனது
பெருமான் நீ இலையோ ? (சிறுவாபுரி)

வாய்பே சாத ஊமையும் உனது
வாசலில் பேசியதாம் ! – கவிதை
வண்ணம் பாடியதாம் ! – இந்தச்
சேய்பே சிவரும் பேச்சில் முருகா
சிலையாய் ஆயினையோ ஊமைச்
செவிடாய் போயினையோ ? (சிறுவாபுரி)

வேலால் நடந்த கதைஉன் கதை அது
விந்தைக் கதையாகும் ! – உலகம்
வியந்து துதிபாடும் ! – இன்று
காலால் நடந்த கதை உன் கதை அது
கண்ணீர்க் கதையாகும் ! – உலகம்
கண்டு நகையாடும் (சிறுவாபுரி)

எத்தனை எத்தனை தாயார் வயிற்றில்
ஏழை கிடந்தேனோ? – முருகா
இங்கு பிறந்தேனோ ? – நான்
எத்தனை எத்தனை மாதர் சுகத்தில்
இதம் களித்தேனோ? – இடர்
எய்தித் துடித்தேனோ ? (சிறுவாபுரி)

அத்தனை வலியும் அத்தனை கிலியும்
அப்பால் விலகட்டும் – நெஞ்சில்
ஆனந்தம் மலரட்டும் – வாழ்வில்
சித்திகள் எய்தச் சக்தி குமரா
சேவல் கூவட்டும் ! – உனது
திருவருள் சேரட்டும் ! (சிறுவாபுரி)

– அருட்கவி கு.செ.இராமசாமி.

***

## சாய்ந்தாடு

சாய்ந்தாடு முருகா சாய்ந்தாடு
சந்தனக் குடமே சாய்ந்தாடு
கோல மயிலே சாய்ந்தாடு
கொஞ்சும் புறாவே சாய்ந்தாடு! (சாய்ந்தாடு)

நெற்றியில் பிறந்த நித்திலமே
நீரினில் வளர்ந்த சித்திரமே

சுற்றச் சுற்றி வருகின்றோம்
சுந்தர மயிலே சாய்ந்தாடு ! (சாய்ந்தாடு)

கார்த்திகைப் பெண்கள் பாலூட்ட
கன்னித் தமிழால் தாலாட்ட
கீர்த்தி மிகவும் கொண்டவனே
சித்திரை நிலவே சாய்ந்தாடு ! (சாய்ந்தாடு)

பிரணவப் பொருளை அறிந்தவனே
பிரம்மனைத் திருத்தும் பேரறிவே
சரவணப் பொய்கை வாழ்பவனே
சண்முக சிவனே சாய்ந்தாடு ! (சாய்ந்தாடு)

தந்தைக்கு மந்திரம் சொன்னவனே
தாயாய் அன்பைப் பொழிபவனே
மந்திரப் பொருளே மரகதமே
மடிமேல் ஏறி சாய்ந்தாடு ! (சாய்ந்தாடு)

சிட்டே சிமிழே முருகய்யா
செந்தூர் வாழும் கந்தய்யா
எட்டுக் குடியின் வேலய்யா
ஏரகத் துரையே சாய்ந்தாடு ! (சாய்ந்தாடு)

அன்பும் பண்பும் வளர்ந்திடவும்
ஆணவம் பொய்யும் நீங்கிடவும்
இன்பம் உலகில் நிலைத்திடவும்
இடைக்கழி முருகா சாய்ந்தாடு ! (சாய்ந்தாடு)

அண்ணன் வயிறோ பெரிதாகும்
அவனே கனியே உண்ணட்டும்
பின்னல் உனக்கு உதவிடுவான்
பொன்னே மணியே சாய்ந்தாடு ! (சாய்ந்தாடு)

வெண்ணெய் தருவான் மாமனுமே
வேலைத் தருவாள் அன்னையுமே
பண்பைத் தருவான் அப்பனுமே
பாடல் தருவோம் நாங்களுமே (சாய்ந்தாடு)

***

# முத்தான முத்துக் குமரன்

முத்தான முத்துக்குமரா முருகையா வா வா
சித்தாடுஞ் செல்வக்குமரா சிந்தைமகிழ வா வா
வள்ளி மணாளா வடிவேலழகா வேலய்யா வா வா
கந்தா கதிர் வடிவேலா கந்தய்யா வா வா (முத்தான)

நீயாடும் அழகைக்கண்டு வேலாடி வருகுதய்யா
வேலாடும் அழகைக் கண்டு மயிலாடி வருகுதய்யா
மயிலாடும் அழகைக்கண்டு மனமாடி வருகுதய்யா
மனமாடும் அழகைக்கண்டு மக்கள் கூட்டம் பெருகுதய்யா (முத்தான)

பன்னீரால் குளிக்கவைத்துப் பட்டாடை உடுக்கவைத்து
சந்தனத்தால் சாந்தெடுத்து அங்கமெல்லாம் பூசிவைத்து
நீறு பூசித்திலகம்வைத்து நெஞ்சத்தில் உன்னைவைத்து
அன்று பூத்த மலரால் உன்னை அர்ச்சிப்பேன் வருவாயப்பா (முத்தான)

முருகா முருகா முருகைய்யா வா வா
கந்தா கடம்பா கதிர்வேலா கந்தய்யா வா வா (முத்தான)

***

# ஒயிலாட்டம்

இயற்றியவர் : **L.N.**நாச்சியப்பன்

கந்தனுக்கும் வேல் வேல்
முருகனுக்கும் வேல் வேல் (கந்தனுக்கும்)

பச்சை மயில் வாகனம்
இச்சை வள்ளி மோகனம்
கச்சை கட்டி ஆடுங்கடி ஒயிலாட்டம்
கால்மாறி ஆடுங்கடி மயிலாட்டம் (கந்தனுக்கும்) 1

தேவயானை கண்ணரசி
தேவேந்திரன் பெண்ணரசி
பூமகளின் மருமகளே ஒயிலாட்டம்
புண்ணியத்தவசீலன் மயிலாட்டம் (கந்தனுக்கும்) 2

பச்சைமலை பவளமலை
இச்சைமலை பழனிமலை
இன்பமலை எமதுநிலை ஒயிலாட்டம்
ஏகபோக தரிசனமாய் மயிலாட்டம் (கந்தனுக்கும்) 3

தங்கப்புள்ளி அங்கமது
தாவித்தாவி ஆடுமது
எங்களது முருகனுக்கு ஒயிலாட்டம்
எல்லையற்ற பேரழகே மயிலாட்டம் (குந்தனுக்கும்) 4

கொண்டை குலுங்குதடி
கூவியே ஆடுதடி
மண்டலமே மயங்குதடி ஒயிலாட்டம்
மாலவனும் மயங்குகின்ற மயிலாட்டம் (குந்தனுக்கும்) 5

முத்துநகை மோகநகை
பித்துநகை பெரியநகை
சித்துகளாம் செந்திலவன் ஒயிலாட்டம்
சிங்கார வேலனுக்கு மயிலாட்டம் (குந்தனுக்கும்) 6

சலங்கை குலுங்குதம்மா
சங்கீதம் பாடுதம்மா
நலுங்காய் ஒலிக்குதம்மா ஒயிலாட்டம்
நாயகனின் பேரருளே மயிலாட்டம் (குந்தனுக்கும்) 7

உடம்புக்குள் ஆடுவதும்
உயிருக்குள் கூடுவதும்
கடம்பனின் பேரருளே ஒயிலாட்டம்
கந்தனின் பேரழகே மயிலாட்டம் (குந்தனுக்கும்) 8

குலுங்கி சிரிக்குமிந்தக்
குழந்தை ஏறி நின்று
அலுங்காமல் ஆடுதய்யா ஒயிலாட்டம்
ஆனந்தக் காட்சியம்மா மயிலாட்டம் (குந்தனுக்கும்) 9

விராலிமலை பழனிமலை
விரும்புகின்ற ஆறுபடை
வெற்றியுடன் ஆடுகின்ற ஒயிலாட்டம்
வேண்டுவரம் தந்திடுமே மயிலாட்டம் (குந்தனுக்கும்) 10

பன்னீர் மணக்குதய்யா
கண்ணீர் பெருகுதய்யா
எந்நேரம் நீவருவாய் ஒயிலாட்டம்
எல்லையிலா பேரழகே மயிலாட்டம் (குந்தனுக்கும்) 11

சிந்துகளோ செந்தூரோ
முந்துங்களே பக்தர்களே
வந்து வந்து ஆடுகின்றான் ஒயிலாட்டம்
வரம்தரவே கூடுகின்றான் மயிலாட்டம் (குந்தனுக்கும்) 12

தந்தனத்தான் பாடுகிறான்
தாளமிட்டுக் கூடுகிறான்
கந்தனவன் ஆடுகிறான் ஒயிலாட்டம்
கற்பனையைப் பாடுங்களே மயிலாட்டம் (கந்தனுக்கும்) 13

***

## தெண்டாயுதத்தானைக் கொண்டாடு மனமே !

ஆலோலம் பாடுகிற வள்ளியம்மை கழுத்தில்
அணியாரம் இட்ட பெருமான்
ஆகாயம் பூமியிடை நீராவிபோல் வடிவில்
ஆதாரமான பெருமான்

மேலாளர் கீழாளர் பேதங்கள் இல்லாது
மெய்யாள வந்த பெருமான்
மின்னாகி இடியாகி மழையாகிக் காற்றாகி
விளைவாக நின்ற பெருமான்

கோலாலம்பூரில் வளர்கோன் தண்டபாணி–இவண்
கோவில் கொண்டாடு மனமே
கூற்றேதும் வாராது கொடு நோயும் சேராது
குறையாத வாழ்வு மிகுமே !

ஓ மென்ற சிறுமுட்டை உள்வீடு அவன் வீடு
உன்வீடும் அந்த இடமே
ஓசைக்கு மணியுண்டு பூசைக்கு மனமுண்டு
உன் வாழ்வு கந்தன் வாசமே

நாமென்ற ஆங்காரம் நமதென்ற எக்காளம்
நடக்காது வேலனிடமே
நடக்கட்டும் பார்ப்போ மென்றிருக்கட்டும் உனதுள்ளம்
நலம்யாவும் வீடுவருமே

கோமன்னன் வாழ்கின்ற கோலாலம்பூர் செந்தூர்
கொடிகட்டி ஆளவிடுமே
கொண்டாடு கொண்டாடு தண்டாயுதத் தானைக்
குறையாத செல்வம் மிகுமே

கவியரசு கண்ணதாசன்

***

# எத்தனை அலங்காரம்

எத்தனை அலங்காரம் எத்தனை அலங்காரம்
முத்தமிழ் முருகனுக்கு
சக்தியின் பிள்ளை சரவண முத்துக்கு
எத்தனை அலங்காரம்

சித்தம் போற்றும் சிவனார் பிள்ளைக்கு
எத்தனை அலங்காரம்
குழந்தை அலங்காரம் கோடிப் புன்னகை
கூடும் அலங்காரம்

மழலை அலங்காரம் மங்கையர் தாலாட்டி
மகிழும் அலங்காரம்
சிறுவன் அலங்காரம் சிவனுக்கு மந்திரம்
செப்பும் அலங்காரம்

குமரன் அலங்காரம் கோதையர் இருவர்
கொஞ்சும் அலங்காரம்
வேலன் அலங்காரம் வேல் கொண்டு சூரனை
வீழ்த்தும் அலங்காரம்

வேடன் அலங்காரம் வேல்விழி வள்ளியை
விரும்பும் அலங்காரம்
விருத்தன் அலங்காரம் வினாயகர் துணையின்
வெற்றி அலங்காரம்

அரசன் அலங்காரம் அனைத்துச் செல்வமும்
அளிக்கும் அலங்காரம்
ஆண்டி அலங்காரம் ஆசையை நீக்கிய
அழகு அலங்காரம்

சந்தன அலங்காரம் சகலப்புகழையும்
தந்திடும் அலங்காரம்
திருநீர் அலங்காரம் தீவினை போக்கிடும்
திவ்விய அலங்காரம்

மலர்கள் அலங்காரம் மங்களம் தருகின்ற
மகிழ்ச்சி அலங்காரம்
திருமண அலங்காரம் தேவியர் இருவர்
திருப்பூட்டும் அலங்காரம்

– குறள் இலக்குவன், காரைக்குடி

***

# பழனி மலையே உயிராகும்

வேல் வேல் முருகா வேல் முருகா
வேல் வேல் முருகா வேல் முருகா
வேல் வேல் முருகா வேல் முருகா
வேல் வேல் முருகா ே வல் முருகா (வேல் வேல்)

ஆடும் மயிலும் வாகனந்தான்
ஆறு முகமும் மோகனந்தான்
பாட்டும் கூத்தும் அவன் வேதம்
பாடித் தொழுவோம் அவன் பாதம் (வேல் வேல்)

காலுங் கையும் நடை போடும்
கந்தன் முருகன் படை கூடும்
நாளும் பொழுதும் அவன் நாமம்
நாயகன் வீடே கதிர் காமம் (வேல் வேல்)

ஆணும் பெண்ணும் பெருங்கூட்டம்
அவனைக் கான வரும் கூட்டம்
ஊனும் உயிரும் ஒராறு
உண்மைப் பொருளே திருநீறு (வேல்வேல்)

கல்லும் மலரும் ஒன்றாகும்
கந்தன் கோவில் நன்றாகும்
உள்ளும் புறமும் தவமயமே
உமையாள் செல்வன் சிவமயமே (வேல்வேல்)

அல்லும் பகலும் நெய்வாசம்
அடியார் போற்றும் தைப்பூசம்
சொல்லும் பொருளும் விளையாடும்
சொர்க்கம் பழனி மலையாகும் (வேல் வேல்)

வேலும் மயிலும் துணையாகும்
வினைகள் தீர்க்கும் மருந்தாகும்
பாலும் பழமும் உணவாகும்
பழநி மலையே உயிராகும் (வேல்வேல்)

***

# மலையினில் அரசு அமைத்த மன்னன்

அப்பனுக்குப்பாடம் சொன்ன சுப்பையா – வெறும்
ஆண்டியாகிப் பழனி வந்த வேலய்யா
கற்பனையைத் தாண்டி நிற்கும் கந்தையா – உனைக்
காண்பதற்கு நடந்து வந்தோம் நாமையா 1

மலையினிலே அரசமைத்த மன்னனே – எங்கள்
மடியினிலே குழந்தையான கந்தனே
தலை இருக்கும் வரையில் உனை வணங்குவோம் – உன்
சந்நிதியில் பாடிப்பாடி மயங்குவோம் 2

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தனம் – அங்கு
கந்தனையே எண்ணி எண்ணி வாழ்ந்தனம்
பூவிரித்த பாண்டி நாட்டில் வாழ்ந்தனம் – உன்
பொன்னடியைக் கண்டு கண்டு மகிழ்ந்தனம் 3

ஏறுகிறோம் இறங்குகிறோம் வாழ்விலே – மயில்
ஏறி வரும் நீயறிவாய் நேரிலே
மாறிவரும் நாகரீக உலகிலே – நாங்கள்
மாறவில்லை தெய்வ பக்தி நிலையிலே 4

இலங்கையிலும் உனது கோவில் கட்டினோம்
எங்கனுமே உனது சிலை நாட்டினோம்
மலைய நாட்டில் உனது கோயில் ஆக்கினோம் – எங்கள்
மனதிலுள்ள பயத்தையெல்லாம் போக்கினோம் 5

தண்டபாணிக் கோயிலன்றி ஊருண்டோ – உன்னைத்
தண்டனிட்டு வணங்காத பேருண்டோ
கொண்டு விக்கப் போன எங்கள் கொள்கையே – உனைக்
கொண்டு வைக்கப்போன எங்கள் கொள்கையல்லவா 6

செந்திலாளும் பழனியாண்டி முருகவேள் – எங்கள்
செட்டி மக்கள் தருமம் காக்க வருகவே
அந்தமில்லா அழகுத்தெய்வம் கந்தவேள் – உன்
அன்பு மக்கள் வாழ்வு காக்க வருகவே 7

ஆண்டு தோறும் ஆண்டு தோறும் வருகிறோம்
ஆண்டு வரும் பழனி நோக்கி வருகிறோம்
வேண்டி வரும் நலங்களெலாம் அருளுவாய் – உன்
வீட்டு மக்கள் போல எமை ஆளுவாய் 8

***

# குறை ஒன்றுமில்லை கோவிந்தா

குறை ஒன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா !
குறை ஒன்றுமில்லை கண்ணா குறை ஒன்றுமில்லை கோவிந்தா
கண்ணுக்கு தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்கு தெரியாமல் நின்றாலும் எனக்கு குறைஒன்றுமில்லை
வேண்டியதை தந்திட வேங்கடேசன் நின்றிருக்க
வேண்டியது வேறில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா ! கோவிந்தா !
திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா உன்னை
மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பார்
என்றாலும் குறையொன்றும் எனக்கில்லை கண்ணா
என்றாலும் குறையொன்றும் எனக்கில்லை கண்ணா
குன்றின் மேல் கல்லாகி நிற்கின்ற வரதா
குறை ஒன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா ! கோவிந்தா
கலி நாளுக்கிரங்கி கல்லிலே இறங்கி
சிலையாகக் கோவிலில் நிற்கின்றாய் கேசவா
குறை ஒன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா
யாரும் மறுக்காத மலையப்பா
யாரும் மறுக்காத மலையப்பா – உன்மார்பில்
ஏதும் தர நிற்கும் கருணைக் கடலன்னை
என்றும் இருந்திட ஏதுகுறை எனக்கு
என்றும் இருந்திட ஏதுகுறை எனக்கு
ஒன்றும் குறையில்லை மறைமூர்த்தி கண்ணா
ஒன்றும் குறையில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா ! கோவிந்தா !

கோவிந்தா ! கோவிந்தா!

***

# ஸ்ரீ வெங்கடேசா

### ஆதிசேஷா அனந்தசயனா
### ஸ்ரீநிவாசா ஸ்ரீ வெங்கடேச

வைகுண்ட நாதா வைதேகி ப்ரியா
ஏழுமலை வாசா எங்களின் நேசா (ஆதி)
வேணு விலோலனா விஜய கோபாலா
நீலமேக வண்ணா கார்மேக கண்ணா (ஆதி)
காளிங்க நர்த்தனா கமனீய கிருஷ்ணா
கோமள வாயனா குருவாயூ ரப்பனா (ஆதி)
ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியைப்பாடு
தீவினை யகல அவன் திருவடி நாடு (ஆதி)
பாவங்கள் போக்க பஜனைகள் செய்வோம்
பார்த்த சாரதியின் பாதம் பணிவோம் (ஆதி)

# மயில் ஆடும் மால் முருகன்

கந்தனுக்கும் வேல் வேல் முருகனுக்கும் வேல் வேல்
கந்தனுக்கும் வேல் வேல் முருகனுக்கும் வேல் வேல்

வெற்றி வடிவேலவனை வேங்கை மரமானவனை
வெண்பாவில் பாடுங்கடி ஒயிலாட்டம் – அங்கே
வேழமுகன் தந்திடுவான் மயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்) 1

திருத்தணிகை வேலவனை தென்பழனி பாலகனை
கூவிக்கூவி ஆடுவது மயிலாட்டம் – இங்கே
கால்மாறி ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்) 2

எங்கள் வடிவேலனுக்கு கந்தவடி வேலவனுக்கு
காவடிகள் ஆடுவது மயிலாட்டம்– இங்கே
கால்மாறி ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கும் லே்) 3

பச்சைமயில் பவளமயில் இச்சைதரும் இன்பமயில்
அழகுமயில் ஆடுதய்யா மயிலாட்டம் – இங்கே
ஆறுமுக வேலவனின் ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்) 4

நீலமயில் நாகமயில் துங்கமயில் தோகைமயில்
புள்ளிமயில் ஆடுதய்யா மயிலாட்டம் – இங்கே
துள்ளி துள்ளி ஆடுவது ஒயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 5

வெள்ளிமயில் தங்கமயில் முத்துமயில் மோகமயில்
வண்ணமயில் ஆடுதய்யா மயிலாட்டம் – இங்கே
வந்தவரும் ஆடுகிறார் ஒயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 6

பங்குனியில் உத்திரமாம் பால்குடமாம் காவடிகள்
எல்லோரும் செலுத்துவது அபிஷேகம் – அந்த
எட்டுக்குடி வேலவனுக்கு அபிஷேகம் (குந்தனுக்கும் வேல்) 7

வேலெடுத்து கச்சைகட்டி விதவிதமாய் மயிலேறும்
வெற்றி வடிவேலனது ஒயிலாட்டம் – இங்கே
வேகமாக ஆடுகிறார் மயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 8

சந்தனம் மணக்குதய்யா சங்கீதம் பெருகுதய்யா
சக்தியவள் மைந்தனது ஒயிலாட்டம் – அவன்
சன்னதியில் ஆடிடுவோம் மயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 9

தணிகைமலை பக்தர்களே தாவி தாவி ஆடுதங்கே
தங்கவடிவேலனது ஒயிலாட்டம் – புதுத்
தண்டபாணி தந்திடுவான் மயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 10

சரணகோஷம் போடுங்கய்யா சங்குநாதம் கேட்குதய்யா
சங்கரனின் மைந்தனது ஒயிலாட்டம் – அந்த
சண்முகனின் பேரழகே மயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 11

வேலவனை காண்பதிலே வேற்றுமைகள் தீர்ந்திடவே
ஒற்றுமையாய் ஆடுவது ஒயிலாட்டம் – அங்கே
ஒன்றாகவழிபடவே மயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 12

உச்சியிலே சடையிருக்க உள்ளங்கையில் வேல்இருக்க
மால்மருகன் முருகனது ஒயிலாட்டம் – இங்கே
மாதரெல்லாம் ஆடுவது மயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 13

தேவர்களின் துயர்தீர்க்க தெய்வயானை மணவாளன்
திருத்தணிகை வேலனது ஒயிலாட்டம் – அடியார்கள்
தினம் தினமும் கண்டிடவே மயிலாட்டம் (குந்தனுக்கும் வேல்) 14

வேடனாக வேஷமிட்டு வேட்டையாடி வேவுபார்த்து
வெற்றிகண்டான் கிழவனாக ஒயிலாட்டம் – அப்போ
வள்ளிதனை மணம்புரிந்தான் மயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்) 15

வேலவனை நம்பிடுவோம் வேதனை சொல்லிடுவோம்
வேண்டும் வரம் தந்திடுவான் மயிலாட்டம் – நாம்
வெற்றியுடன் ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்) 16

துள்ளி துள்ளி ஆடிடுவோம் துஷ்டர்களை வென்றிடுவோம்
எங்கள் வடிவேலனுக்கு மயிலாட்டம் – இங்கே
எல்லோரும் ஆடுவது ஒயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்) 17

சர்க்கரையும் காவடிகள் சண்முகனைக் கண்டிடவே
சதுராட்டம் ஆடுதய்யா ஒயிலாட்டம் – அவன்
சன்னதியில் ஆடுமய்யா மயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்) 18

குன்றுகளில் குடியிருப்பான் குறைகளெல்லாம் தீர்த்திடுவான்
கூட்டமாக ஆடிடுவோம் ஒயிலாட்டம் – அவனை
கும்பிட்டருள் பெற்றிடுவோம் மயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்) 19

திருத்தணிகை வேலவனே தெருத்தெருவாய் நடந்து வாரோம்
வறுமையெல்லாம் தீர்ந்திடவே ஒயிலாட்டம் – இங்கே
வரிசையாக ஆடுவது மயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)20

தந்தனத்தான் பாடுங்கய்யா தாளமிட்டு ஆடுங்கய்யா
கந்தனவன் ஆடுவது ஒயிலாட்டம் – நம்ம
காலில் வலி தீர்ந்திடவே மயிலாட்டம் (கந்தனுக்கும் வேல்)21

***

## “முருகா உன்னை அழைக்கின்றேன்.”

வேல் வேல் முருகா வேலையா
வெற்றிவேல் முருகா வேலையா
வேல் வேல் முருகா வேலையா
வெற்றிவேல் முருகா வேலையா (வேல் வேல்) 1

முருகா உன்னை அழைக்கின்றேன்
முத்தமிழ் பாடி துதிக்கின்றேன்
மருகா உன்னை அழைக்கின்றேன்
மறைகள் பாடி துதிக்கின்றேன் (வேல் வேல்) 2

கந்தா உன்னை அழைக்கின்றேன்
கவசம் பாடி துதிக்கின்றேன்
மன்னா உன்னை அழைக்கின்றேன்
மந்திரம் பாடி துதிக்கின்றேன் (வேல் வேல்) 3

வேலா உன்னை அழைக்கின்றேன்
விருத்தம் பாடி துதிக்கின்றேன்
மாலா உன்னை அழைக்கின்றேன்
மயிலைப்பாடி துதிக்கின்றேன் (வேல் வேல்) 4

சண்முகா உன்னை அழைக்கின்றேன்
சரவணம் பாடி துதிக்கின்றேன்
கண்ணின் மணியை அழைக்கின்றேன்
காவியம்பாடி துதிக்கின்றேன் (வேல் வேல்) 5

ஆடும் மயிலும் வாகனம்தான்
ஆறுமுகமும் மோகனம் தான்
பாட்டும் கூத்தும் அவன் வேதம்
பாடித் தொழுவோம் அவன் நாமம் (வேல் வேல்) 6

காலும் கையும் நடைபோடும்
கந்தன் முருகன் படை கூடும்
நாளும் பொழுதும் அவன் நாமம்
நாயகன் வீடே கதிர்காமம் (வேல் வேல்) 7

ஆணும் பெண்ணும் பெருங்கூட்டம்
அவனைக் காண வருங்கூட்டம்
ஊனும் உயிரும் ஓராறு
உண்மைப் பொருளே திருநீறு (வேல் வேல்) 8

கல்லும் மலரும் ஒன்றாகும்
கந்தன் கோவில் ஒன்றாகும்
சொல்லும் பொருளும் விளையாடும்
சொர்க்கம் பழநி மலையாகும் (வேல் வேல்) 9

அல்லும் பகலும் நெய்வாசம்
அடியார் போற்றும் தைப்பூசம்
உள்ளும் புறமும் தவமயமே
உமையாள் செல்வன் சிவமயமே (வேல் வேல்) 10

வேலும் மயிலும் துணையாகும்
வினைகள் தீர்க்கும் மருந்தாகும்
பாலும் பழமும் உணவாகும்
பழநி மலையே உயிராகும். (வேல் வேல்) 11

***

## ஆடுக மயிலில் ஆடுகவே

ஆடுக மயிலில் ஆடுகவே
ஐயா குமரா ஆடுகவே
ஆடுக மயிலில் ஆடுகவே
ஐயா குமரா ஆடுகவே ஆடுக 1

அண்ணன் யானை முகத்தானை
அன்பாய் மனதில் நினைத்தே நான்
கண்ணன் மருகனை நாடுகின்றேன்
கார்த்திகை முருகனை பாடுகின்றேன் ஆடுக 2

மாண்புடை மேலைச் சிவபுரியில்
மதுரை நாயகன் கோயில் கொண்டான்
மணிமுத் தாற்றில் மண் சுமந்தான்
வடிவேலவனை நமக்குத்தந்தான் ஆடுக 3

தேசிகன் வேலனை சுமந்துவர
தெருவில் மக்கள் திரண்டுவர
சிவல்புரி காவடி ஊர்ந்துவர
செந்தூர் முருகன் சேர்ந்துவ ஆடுக 4

பொங்கும் தையில் ஒருநாளாம்
பூசம் என்னும் திருநாளாம்
திங்களில் ஒருநாள் பெருநாளாம்
திருத்தணி முருகன் திருநாளாம் ஆடுக 5

அணையா விளக்கே ஆறுமுகம்
துணையாய் வருவது மாசிமகம்
நினையேன் கனவிலும் வேறுமுகம்
நித்தம் காண்பார் எனதுமுகம் ஆடுக 6

தேன்சுவை செந்தமிழ் தந்தவனே
தீனதயாபர சுந்தரனே
தெய்வ யானையை மணந்தவனே
திருக்கழுக் குன்றில் அமர்ந்தவனே. ஆடுக 7

உன்னைப் பார்த்தால் மயிலிருக்கும்
மயிலை பார்த்தால் நீயிருப்பாய்
வேலைப் பார்த்தால் ஒளியிருக்கும்
ஒளியில் ஆறு முகமிருக்கும் ஆடுக 8

பங்குனி உத்திரம் தேடிவர
பக்தர்கள் காவடி யாடிவர
சித்திரை நிலவும் கூடிவர
செந்தா மறையாள் நாடிவர ஆடுக 9

பார்க்கும் கண்கள் இரண்டு வைத்தாய்
கேட்கும் காதும் இரண்டு வைத்தாய்
நெஞ்சில் யேனோ ஐந்தை வைத்தாய்
நேர்வழி காட்டிட யாரை வைத்தாய் ஆடுக10

பார்த்து பார்த்து ரசிக்கின்றேன்
பாடிப்பாடி அழைக்கின்றேன்
பாட்டை கேட்டு ரசிக்கின்றாய்
பச்சை மயிலில் குதிக்கின்றாய் ஆடுக11

தெற்கும் வடக்கும் உனக்காக
தேன்கமழ் பழநி உனக்காக
மேற்கும் கிழக்கும் உனக்காக
மெதுவாய் ஒருமுறை எனக்காக ஆடுக12

அன்புத் தெய்வம் நீயப்பா
அருணா சலனே தேனப்பா

துன்பம் துடைப்பவன் நீயப்பா
தோகை மயிலுடை வேலப்பா. ஆடுக13

பொட்டும் பூவும் தந்திடுவாய்
தொட்டில் குழந்தையை காத்திடுவாய்
ஏட்டில் எழுத்தாய் தோன்றிடுவாய்
எங்கும் மழையாய் பொழிந்திடுவாய் ஆடுக14

சண்முக நதியில் நீராடி
சரவணப் பொய்கையில் கலந்தாடி
ஆவினன் குடியெனும் பதிதேடி
அருள்பெற வந்தேன் உனைநாடி ஆடுக15

திருப்புகழ் ஒருவன் பாடுகின்றான்
திருத்தணி முருகன் ஆடுகின்றான்
திருப்பதி மாமன் தேடுகின்றான்
திருப்பாற் கடலை நாடுகின்றன் ஆடுக16

கோயில் வீட்டார் குல தெய்வம்
குழந்தைகள் பெயர் தரும் குடும்ப தெய்வம்
புதுவை அரசன் தந்த தெய்வம்
போற்றி வணங்கிட நல்ல தெய்வம் ஆடுக17

வலம்புரி சங்குகள் ஓலமிட
வானத்து மீன்கள் ஜாலமிட
வாகுடன் தொண்டர்கள் நடந்துவர
வடிவே லவனை வணங்கிவர ஆடுக18

தெரிந்தொரு பிழையும் செய்தறியேன்
தெரியா தாயிரம் செய்திருப்பேன்
தேவா என்பிழை பொருத்தருள்வாய்
செந்தூர் வாசா உனதடிமை. ஆடுக19

பாடிட வைத்தது பந்தமடா
பரம்பரை வழியில் வந்ததடா
பாடலில் நிற்பவன் கந்தனடா
பாட்டன் காலத்து சொந்தமடா ஆடுக20

***

# எத்தனை அபிஷேகம்

எத்தனை அபிஷேகம் எத்தனை அபிஷேகம்
எங்கள் முருகனுக்கு
சூரனை வென்ற சண்முக வேலுக்கு
எத்தனை அபிஷேகம் எத்தனை 1

பச்சைமயில் வாகனன் பன்னிருகை வேலனுக்கு
எத்தனை அபிஷேகம்
பச்சிளங் குழந்தைக்கு பாலென்றும் கிடைத்திட
பால் கொண்டு அபிஷேகம் எத்தனை 2

கள்ளழகர் மருகன் உள்ளங்கவர் கள்வனுக்கு
எத்தனை அபிஷேகம்
கணவனும் மனைவியும் இணைந்தே வாழ்ந்திட
தயிர்கொண்டு அபிஷேகம். எத்தனை 3

இளமங்கை வள்ளிதனை கைபிடித்த விருத்தனுக்கு
எத்தனை அபிஷேகம்
இளையதலை முறையின் பழமொழி பொய்த்திட
இளநீர் அபிஷேகம் எத்தனை 4

மாம்பழம் வேண்டி மலைதனில் நின்றவனுக்கு
எத்தனை அபிஷேகம்
மழைத்துளி விழுந்து மண்ணும் குளிர்ந்திட
பன்னீர் அபிஷேகம் எத்தனை 5

தேவமகள் யானைதனை கைபிடித்த வீரனுக்கு
எத்தனை அபிஷேகம்
தஞ்சமடைந்தவர் பஞ்சம் தீர்த்திட
பஞ்சாமிர்த அபிஷேகம் எத்தனை 6

சந்தங்கள் பாட சதிராடும் சாமிக்கு
எத்தனை அபிஷேகம்
சந்ததிகள் வந்திட சந்தானம் பெற்றிட
சந்தன அபிஷேகம் எத்தனை 7

உலகமெல்லாம் ஆளும் உத்தமச் செல்வனுக்கு
எத்தனை அபிஷேகம்
உள்ளும் புறமும் பிணிகள் நீங்கிட
திருநீர் அபிஷேகம் எத்தனை 8

***

# சின்னச் சின்னக் காவடி

சின்னச் சின்னக் காவடி
செந்தில் நாதன் காவடி
வண்ண வண்ணக் காவடி
வள்ளி நாதன் காவடி சின்ன 1

இங்கும் அங்கும் காவடி
ஏர கத்தான் காவடி
அங்கும் இங்கும் காவடி
அழகு வேலன் காவடி சின்ன 2

ஆட்டம் ஆடும் காவடி
ஆண்டி யப்பன் காவடி
பாட்டுப் பாடும் காவடி
பழநி யப்பன் காவடி சின்ன 3

முன்னும் பின்னும் காவடி
முருக வேலன் காவடி
கண்ணும் மனமும் காவடி
கந்த வேலன் காவடி சின்ன 4

இன்பமூட்டும் காவடி
இரத்தின வேல் காவடி
பஞ்சம் தீர்க்கும் காவடி
பழநி மலையான் காவடி சின்ன 5

சென்னி மலையான் காவடி
சேவற் கொடியோன் காவடி
தாகம் தீர்க்கும் காவடி
தண்ணீர் மலையான் காவடி சின்ன 6

பாலும் பழமும் காவடி
பஞ்சா மிர்தக் காவடி
வேலும் மயிலும் காவடி
வினைகள் தீர்க்கும் காவடி சின்ன 7

***

# அவினாசி பத்து

முன்னுர :

எண்பது ஆண்டுகளுக்கு முன்பு என் தந்தையார் இப்பாடல்களை அடிக்கடி பாடுவார்கள். துன்பமும் துயரமும் வந்தபோது மட்டுமல்ல. இன்பமும் மகிழ்ச்சியும் ஏற்படும் போது பாடுவார்கள். நானும் உடன்பாடித் தெரிந்து கொண்டேன். இப்பாடல்கள் எந்த நூலில் உள்ளதோ - இதன் ஆசிரியர் யாரோ - தெரியவில்லை - முருகன் தமிழின். தமிழரின், தமிழகத்தின் தெய்வம் - அவன் அழகன், வேலன், அன்பன், தன்னை அழைத்தவர்க்கு ஓடோடி வந்து அருள்புரிவான் என்று கீழே உள்ள ஓலைச்சுவடி பழம் பாடல் கூறுகிறது. இப்பாடல்களை உளமுருகிப் பாடுங்கள். கந்தனை கடம்பனை முருகனை வேலனை பழனிக்குமரனை பாலகனை அய்யனை நினைந்து பாடுங்கள்; திரும்பத் திரும்பப் பாடுங்கள் உள்ளத்தூய்மையுடன் பாடுங்கள். அழையுங்கள் வருவான். கேளுங்கள் கொடுப்பான்.

துன்பம் மங்கி ஒளியும் இன்பம் பொங்கி வழியும்

- முனைவர் கி.ஆ.பெ.விசுவநாதம்

வற்றாத பொய்கை வளநாடு கண்டு
மலைமேலிருந்த குமரா
உற்றார் எனக்கு ஒருபேரு மில்லை
உமையாள் தனக்குமகனே
முத்தாடை தந்து அடியேனை யாளும்
முருகேசன் என்றனரசே !
வித்தார மாக மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே ! 1

ஆலால முண்டோன் மகனாகி வந்து
அடியார் தமக்கும் உதவி
பாலூர(ல்) உண்டு கனிவாய் திறந்து
பயனஞ்செழுத்தை மறவேன்
மாலான வள்ளி தனைநாடி வந்து
வடிவாகி நின்றகுமரா !
மேலான வெற்றி மயில் மீதிலேறி
வரவேணு மென்றனருகே ! 2

திருவாசல் தோறும் அருள்வே தமோத
சிவனஞ்செழுத்தை மறவேன்
முருகேச ரென்று அறியார் தமக்கு
முதலாகி நின்றகுமரா
குருநாத சுவாமி குறமாது நாதர்
குமரேச(ர்) என்றபொருளே!
மறவாமல் வெற்றி மயில்மீதிலேறி
வரமேணு மென்றனருகே ! 3

உதிரந் திரண்டு பனியீர லுண்டு
உருவாசல் தேடிவருமுன்
ததிபோ லெழுந்த திருமேனி நாதர்
கடைவீடு தந்துமருள்வாய்
முதிரஞ் சிறந்த வயல்வீறு செங்கை
வடிவேல் எடுத்தகுமரா !
யதிராய் நடந்து மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே ! 4
மண்ணாடு மீசன் மகனாரை யுந்தன்
மலைவீடுதந்து மருள்வாய்
வண்டூரல் பாயும் வயலூரில் செங்கை
வடிவேல் எடுத்தகுமரா !
நன்றாக வந்து அடியேனை யாண்டு
நல்வீடு தந்தகுகனே !
கொண்டாடி வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே ! 5

நீலஞ்சிறந்த குறமாது வள்ளி
நின்பாகம் வைத்தகுமரா
கால னெழுந்து வெகுபூசை செய்து
கயிறுமெடுத்து வருமுன்
வேலும் பிடித்து அடியார் தமக்கு
வீராதி வீரருடனே
சாலப் பரிந்து மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே ! 6

தலைகட்ட நூலின் நிழல்போல நின்று
        தடுமாறி நொந்து அடியேன்
நிலைகெட்டு யானும் புவிமீதில் நின்று
        நெடுமூச்செறிய விதியோ
அலைதொட்ட செங்கை வடிவேற் கடம்பா
        அடியேனை ஆளுமுருகா !
மலையேறி மேவு மயில்மீ திலேறி
        வரவேணு மென்றனருகே ! 7

வண்டுண்டு பூவில் மதுவூரில் பாயும்
        வயலூரில் செங்கைவடிவேல்
கண்டொன்று சொல்லித் திரிவார்கள் வாசல்
        கடனென்று கேட்கவிதியோ?
வண்டூறு பூவி லிதழ்மேவும் வள்ளி
        தெய்வானைக் குகந்தவேலா
நன்றென்று சொல்லி மயில்மீ திலேறி
        வரவேணு மென்றனருகே ! 8

விடதூத ரோடிவரும்போது உம்மை
        வெகுவாக நம்பினேனே.
குறமாதுவள்ளியிடமாக வைத்து
        மயிலேறி வந்தகுமரா
திடமாகச் சோலை மமைீதில் வாழும்
        திருமால் தமக்குமருகா
வடமான பழநி வடிவேல்நாதா
        வரவேணுமென்றனருகே ! 9

ஓங்கார சக்தி உமைபால் குடித்து
        உபதேச முரைத்தபரனே !
பூங்கா வனத்தில் இதழ்மேவும் வள்ளி
        புஜமீ திருந்த குகனே

ஆங்கார சூரர் படைவீடு சேர
வடிவேல் விடுத்தபூபா
பாங்கான வெற்றி மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே ! 10

ஆறாறு மாறு வயதான போது
அடியேன் நினைத்தபடியால்
வேறேது சிந்தை நினையாம லுந்தன்
ஆசார சங்க மருள்வாய்
அசுரேசர் போல யமதூத ரென்னைத்
தொட்டோட கட்டவருமுன்
மாறாது தோகை மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே ! 11

கையார உன்னைத் தொழுதேத்த மனது
கபடேது சற்றுமறியேன்
அய்யா உனக்கு ஆளாகும் போது
அடியார் தமக்குளளியேன்
பொய்யான காயம் அறவே ஒடுங்க
உயிர்கொண்டு போகவருமுன்
வையாளி யாக மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே ! 12

ஏதேது ஜென்ம மேடுத்தேனோ முந்தி
யிந்தப் பிறப்பிலறியேன்
மாதாபி தாநீ மாயன் தனக்கு
மருகா குறத்திகணவா
காதோடு கண்ணை யிருளாக மூடி
உயிர்கொண்டு போகவருமுன்
வாதாடி நின்று மயில்மீ திலேறி
வரவேணு மென்றனருகே ! 13

***

# வேல் வேல் முருகா

வேல்வேல் முருகா வேல்முருகா
வேல்வேல் முருகா வேல்முருகா
வேல்வேல் முருகா வேல்முருகா
வேல்வேல் முருகா வேல்முருகா

வாவா முருகா வடிவேலா
வளரும் தமிழே சிவபாலா
கருணை பொழியும் கதிர்வேலா
காக்கும் துணையாய் வருவாயே (வேல்வேல்) 1

சக்திக் கனலாய் உருவாகிச்
சரவணப் பொய்கை மலராகிக்
கார்த்திகை பெண்கள் தாலாட்டக்
கருணை வடிவாய் வளர்ந்தவனே (வேல்வேல்) 2

தங்க ரதங்கள் கொண்டவனே
தரணி புகழும் ஆண்டவனே
சரவணபவ ஓம் மந்திரத்தில்
சகலமும் அடக்கி ஆள்பவனே (வேல்வேல்) 3

பஞ்சா மிர்தம் பன்னீரு
பாலுடன் தேனுடன் திரு நீறு
சந்தனம் மணக்கும் உந்தன்மேனி
ஷண்முகநாதா உன்புகழ் சொல்லும் (வேல்வேல்) 4

கால்நடை வருவோர் ஒருபக்கம்
காவடி சுமப்போர் மறுபக்கம்
இடும்பன் காவல் இப்பக்கம்
கடம்பன் காவல் முப்பக்கம் (வேல்வேல்) 5

அன்னை தந்த வேலெடுத்து
அசுரர் குலத்தை அழித்தொழித்து
சேவலை மயிலை உன்னிடமாக
ஜெகமே புகழக் கொண்டவன்நீரே (வேல்வேல்) 6

தேவர் மூவர் சிறைமீட்டு
தெய்வானை கரம் பிடித்து
திருப்பரங் குன்றத் திருமணக்கோலம்
தினமும் காட்சி தருபவன் நீயே (வேல்வேல்) 7

பழமுதிர்ச் சோலை மரமாகிப்
பார்த்தவர் மயக்கும் கிழமாகி
வம்புக்கார வள்ளிப் பெண்ணின்
வளைக்கரம் பற்றிய பெருமான் நீயே (வேல்வேல்) 8

வள்ளியம்மை சடையப்பர்
வழங்கிய நல்ல மண்டபத்தில்
அள்ளித்தந்திடும் வள்ளல் முருகன்
ஆடுகின்றார் பொன் ஊஞ்சல் (வேல்வேல்) 9

செம்மட பட்டி ஊஞ்சலிலே
சின்னக் குழந்தை வடிவேலன்
வண்ணப் பூக்கள் தொட்டுத்தழுவ
வடிவேலுடனே ஆடுகின்றான் (வேல்வேல்) 10

செம்மடபட்டி ஊஞ்சலிலே
ஜெகமே புகழும் உன்னழகைக்
கண்டால் போதும் கவலைதீரும்
கஷ்டம் எல்லாம் ஓடிப்போகும் (வேல்வேல்) 11

அண்ணா மலையும் அகமகிழ்ந்தே
அப்பா முருகா உனக்கென்றே
செய்து வைத்த வெள்ளி ஊஞ்சல்
புள்ளி மயிலாய் ஆடுதய்யா (வேல்வேல்) 12

மழலைச் சிரிப்பு அழகோடு மாதா
தந்த வேலோடு அழகிய ஊஞ்சல்
ஆடிமகிழ்ந்திடும் ஆனந்த
காட்சிக்கு ஈடேஇல்லை (வேல்வேல்) 13

அய்யா என்றே பெருமையுடன்
அடியவர் வணங்கும் அருளாடி
அள்ளித் தந்திடும் திருநீற்றில்
அப்பா உன்முகம் காண்கின்றோம் (வேல்வேல்) 14

ஆறு காலுச் சவுக்கையிலே
அய்யா உருவில் பிரம்பெடுத்தே
அன்பர்கள் எல்லாம் கண்டே மகிழ்ந்திட
ஆடிடும் அழகே தனியழகு (வேல்வேல்) 15

காவடி ஆடிடும் அழகினிலே
கலந்து நின்று சிரிப்பவனே
திருவடி சரணம் சரணமென்றே
தினமும் பணிவேன் நலந்தருவாயே (வேல்வேல்) 16

சந்தத் தமிழில் நான்பாட
ஷண்முக நாதா வந்திடுவாய்
வந்தென் இல்லம் தங்கியிருந்தே
வளங்கள் எல்லாம் தருவாயப்பா (வேல்வேல்) 17

செய்யும் தொழில்கள் சிறந்திடவே
சிறப்புடன் வளங்கள் பெருகிடவே
தொட்ட தொழிலில் நட்டம்வராமல்
தொடர்ந்து லாபம் தருவாயப்பா (வேல்வேல்) 18

அப்பா முருகா என்பேனே
ஆனந்த முருகா என்பேனே
எப்பொழுதும் என்பக்க மிருந்தே
எல்லா நலமுந் தருவாயப்பா (வேல்வேல்) 19

ஆடிடும் காவடி அழகினிலே
அற்புதம் காட்டிடும் வேலவனே
ஆடும் மயிலும் அற்புத வேலும்
உன்னுடன் காண வந்திடு முருகா (வேல்வேல்) 20

அன்ன தானம் செய்திடுவோம்
அப்பா உன்னைப் புகழ்ந்திடுவோம்
பண்ணைஎல்லாம் செல்வம் கொழிக்கப்
பழம்நீ அப்பா வருவாயே (வேல்வேல்) 21

குமரன் புகழைப் பாடிடுவோம்
கூறும் குறைகள் தீர்த்திடுவான்
பாடிடும் அடியவர் பலன்கள் பெற்றிடப்
பழம்நீ அப்பன் வந்திடுவானே (வேல்வேல்) 22

தங்கத் தேரில் பவனிவரும்
ஷண்முக நாதன் திருமுகத்தைக்
கண்டால் போதும் கவலை தீரும்
கஷ்டமெல்லாம் ஓடிப்போகும் (வேல்வேல்) 23

***

# "முருகையா முருகையா"

பாசி படர்ந்த மலை முருகையா
பங்குனித்தோர் ஓடும் மலை முருகையா
ஊசி படர்ந்த மலை முருகையா
உத்திராட்சம் காய்க்கும் மலை முருகையா
மலைக்கு மலை நடுவே முருகையா
மலையாள தேசமப்பா முருகையா
மயிலேரி வருவாயிப்போ முருகையா
மலையா மலையழகாம் முருகையா
அந்த மலைக் குயர்ந்த மலை முருகையா
ஆகும் பழநிமலை முருகையா
எந்த மலையைக் கண்டு முருகையா
ஏறுவேன் சந்நிதிமுன் முருகையா
ஏறாத மலை தனிலே முருகையா
ஏறி நின்று தத்தளிக்க முருகையா
பாராமல் கைகொடுப்பாய் முருகையா
பழநிமலை வேலவனே முருகையா
அஞ்சு கை கெஞ்சிவர முருகையா
அழகு சடை மேற்புரள முருகையா
குஞ்ச சடை மேதினிலே முருகையா
குயிலிருந்து கூவுதப்பா முருகையா
வேலெடுத்து கச்சை கட்டி முருகையா
குழந்தை வடிவேலவனே முருகையா
உச்சியில் சடை யிருக்க முருகையா
உள்ளங்கை வேலிருக்க முருகையா
நெற்றியில் நீறிருக்க முருகையா
நிலையுமய்யா இவ்வூரில் முருகையா
நீலமய்யா உன்மேனி முருகையா
நித்தமய்யா சங்குநாதம் முருகையா
தைப்பூச தேரப்பா முருகையா
தேசத்தார் கொண்டாட முருகையா
இடும்பன் ஒரு புறமாம் முருகையா
இருபுறமும் காவடியாம் முருகையா
கடம்ப வனம் கண்டு முருகையா
காட்சி வனம் கண்டு முருகையா
காட்சி தர வருவாயிப்போ முருகையா
பாவி நானென்று சொல்லி முருகையா
பாராமல் இருக்கலாமோ முருகையா
பார்த்து வரம் தந்திடுவாய் முருகையா

***

# பழநி மலை முருகா

முருகா முருகா வேல்முருகா
முருகா முருகா வேல்முருகா

நல்லதமிழ்ச் சொல்லெடுத்து நாளும் பாடு
நம்தலைவன் முருகனையே நாடி ஓடு
வல்லகதிர் வேலவனும் வள்ளியோடு
வந்துநலந் தந்திடுவான் வாகை யோடு – முருகா

அஞ்சுவகை கனியெடுத்து அமுது செய்வோம்
ஆறுமுகன் மேனியிலே தொழுது பெய்வோம்
கொஞ்சுமெழில் குமரனுக்கு பூக்கள் கொய்வோம்
கூறுதமிழ்ச் சொல்லெடுத்து பாக்கள் செய்வோம் – முருகா

தண்ணாரும் பழநிமலை நடந்து செல்வோம்
சாலைவழித் துன்ப மெல்லாங் கடந்து செல்வோம்
கண்ணான முருகனையே கொஞ்சி மகிழ்வோம்
கருணைமழை பொழிகவெனக் கெஞ்சிக் கேட்போம் – முருகா

கல்லமுத்தித் தாரரித்துத் தோலுந் தேயும்
காலிரண்டும் கொப்பளித்துக் கன்றிப் போகும்
வல்லனெனும் கந்தனவன் பேரைக் கூவ
வேதனைகள் தீர்ந்துநடை வேகங் கூடும் – முருகா

வேதனையே சொந்தமென எண்ணும் போது
கவலையெனும் கடலதுவும் வற்றிப் போகும்
வேதனையிற் தெளிவுவரும் செல்வஞ் சேரும்
செரு முனையில் பகையழிந்து வெற்றி கூடும் – முருகா

அண்ணனுக்கும் யானையென மாறுதலை
அப்பனுக்கும் கங்கையென மாறுதலை
சண்முகனாம் கந்தனுக்கு மாறுதலை
தந்தருள்வான் எந்தனுக்கு மாறுதலை – முருகா

– மீயன்னா. சேவுகன் செட்டி.

# என்னோடும் பேசு சாமிநாதா !

ஈசனோடு பேசியது போதுமே
என்னோடும் பேசுசாமி நாதனே
ஆசையோடு தமிழெடுத்துப் பாடினேன்
ஐயாஉன் திருவடியே நாடினேன் (ஈசனோடு)

கண்சீறும் பொறியூறிப் பிறந்தவா
கமலத்தில் அன்றுநீயும் தவழ்ந்தவா
தண்ணீரில் சளியுனக்குப் பிடிக்குமே
சரவணத்துப் பொய்கைவிட்டு எழுந்துவா (ஈசனோடு)

கடலோரம் நிற்பவனே சண்முகா
கடல்நீரால் உடலரிக்கும் அல்லவா
நடமாடும் மயிலேறி இங்குவா
நல்லமனக் கோயிலுண்டு தங்கவா (ஈசனோடு)

குன்றத்தில் கல்யாணம் ஆனதால்
குவயத்தை நீமறத்தல் நியாயமா
குன்றத்தையும் விட்டிறங்கி ஓடிவா
கொஞ்சுதமிழ் இசைகேட்டு ஆடிவா (ஈசனோடு)

பன்னிரெண்டு கண்களாடுந் தெய்வமே
என்னைமட்டும் காணமனம் இல்லையோ
உன்னைவிட்டு யாரைஇனி நம்புவேன்
சண்முகனே அன்றுடனே வம்புஏன் (ஈசனோடு)

ஒன்றிரண்டு வழியேனும் திறந்து
ஓரவிழிப் பார்வையேனும் புரிந்திடு
என்றுமுனை நம்பிநின்றேன் கரங்கொடு
ஏற்றமுடன் யான்வாழ வரங்கொடு (ஈசனோடு)

***

# பச்சை மயில் வாகனன்

பச்சை மயில் வாகனனே – சிவ
பால சுப்ரமண்யனே வா – இங்கு
இச்சையெல்லாம் உந்தன் மேலே வைத்தேன் – முருகா
எள்ளளவும் ஐயமில்லையே (பச்சை)
கொச்சை மொழி ஆனாலும் – உன்னை
கொஞ்சி கொஞ்சி பாடிடுவேன் – இங்கு
சர்ச்சை யெல்லாம் மறைந்ததப்பா – முருகா
சாந்தம் நிறைந்ததப்பா (பச்சை)
நெஞ்சமதில் கோயில் அமைத்தேன் – அங்கு
நேர்மை யெனும் தீபம் வைத்தேன் – நீ
செஞ்சிலம்பு கொஞ்சிடவே வா – முருகா
சேவற் கொடி மயில் வீரா (பச்சை)
வெள்ளமது பள்ளந்தனிலே – பாயும்
தன்மைபோல் உள்ளந்தனிலே – நீ
மெல்ல மெல்ல புகுந்துவிட்டாய் – முருகா
எங்கள் உள்ளமெல்லாம் கரைந்ததப்பா (பச்சை)
ஆறுபடை வீடுடையவா எங்களுக்கு
ஆறுதலைத் தரும்தேவா – நீ
ஏறுமயில் ஏறிவருவாய் – முருகா
எங்கும் நிறைந்தவனே (பச்சை)
அலைகடல் ஓரத்திலே
என் அன்பான ஷண்முகனே
நீ அலையா மனம் தந்தாய் – முருகா
உனக்கு அனந்த கோடி நமஸ்காரம் (பச்சை)

***

# சுப்பிரமணியர் துதி

முத்தைத்தரு பக்தித் திருநகை
அத்திக்கிறை சக்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிர மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
ஒற்றைக் கிர மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்துடன் ரட்சித் தருளுவ தொருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு கழுத்தாட
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்படவு ரிக்குத் திரிகட எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்கு பிடியென முதுகூகை
கொட்புற்றெழு நட்பற் றவுணரை
வெட்டிப்பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப்பொரவல பெருமாளே

***

# சிறுவாபுரி பதிகம்
## காப்பு

சிவனாரின் பிள்ளை கணநாத வள்ளல்
திருப்பாதம் முந்தித் தொழுது
புவியாளக் குன்றந் தனிலாடும் வேலன்
புகழ்பாட நல்ல தமிழை
சுவையோடு தந்து நிறைவாகச் செய்ய
துணையாக வேண்டும் எனவே
கவிபாடி வேண்டிக் கசிந்தேத்து கின்றேன்
கணநாதன் என்றுந்துணையே.

***

# பதிகம்

கல்லாத பேர்க்கும் கவிபாடும் ஆற்றல்
கடல்போல தந்து விடுவான்
வெல்லாத கோழை வெகுவீர னாக
விதிமாற்றி வைத்து விடுவான்
நில்லாத செல்வம் நிலையாக இல்லில்
நிதங்கூடச் செய்து விடுவான்
செல்வாக்கும் வீடும் சீரோடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே 1

எனக்காக இல்லம் இலையேஎன் றேங்க
எழில்வீடு ஐயன் தருவான்
பணக்கார னென்றும் பரதேசி யென்றும்
பார்த்தாள எண்ணி அறியான்
தனைக்காண வந்து தமிழ்பாடும் அன்பர்
துணையாக என்றும் வருவான்
தினைக்கட்டு வள்ளி தனைநாடும் வள்ளல்
சிறுவாபுரிக் குமரனே. 2.

நெல்லோடு வாழை நிறைவோடு சூழும்
நிலமோங்க நல்ல பதியாம்
வில்லேந்தும் ராமர் வைதேகி பாலர்
வென்றாடி நின்ற இடமாம்
பொல்லாத சூரன் புறமோட்டி வேலன்
பொழுதோடு தங்கும்இடமாம்
செல்வாக்கும் வீடும் சீரோடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே 3

தவமோங்க தந்தை செவியோடு பேசிச்
சதுர்வேதம் சொல்லி விடவே
சிவசாமி நீயும் தென்சாமி மலையில்
திருவீடு கொள்ள விலையோ
புவிவாழும் யானும் புதுவீடு ஒன்றில்
புகவேணும் நல்ல குடியே
சிவபால தேவன் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே 4

எட்டாத வானோர் எழிலான வீட்டில்
எக்காள மிட்டுப்புகுந்து
கொட்டாடும் சூரர் குலநாச மாகக்
கூர்வேலைத் தொட்ட குமரன்
தட்டாமல் தேவர் தன்வீடு தன்னில்
தானாள விட்ட குகனாம்
செட்டாய் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே 5

சூராதி சூரன் தூளாகிப் போக
சுகமேவு தேவர் மகிழ்ந்து
காராருங் கூந்தல் தெய்வானை தன்னைக்
கல்யாணஞ் செய்து தருவார்
ஏராரும் வேலன் இல்வாழ்க்கை காணும்
இனியபரங் குன்றம் எழிலாம்
சீராய் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே 6

ஒருயானை போன்ற கணநாத வள்ளல்
ஒப்போடு அன்று உதவ
குறமாது தன்னை மணமாலை சூடிக்
கொண்டாடும் இன்ப நிலையில்
தருமேவு நல்ல தணிகாசலத்தில்
தனிவீடு கொண்ட குகனாம்
சிறியேன் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே 7

சிறகாட வானில் பறந்தாடும் புள்ளும்
சிறுகூடு கட்டி வளரும்
குறியாகப் பணத்தைக் கொள்ளாது விட்ட
அறியாத பிள்ளை எனையும்
உறவோரும் என்றும் ஒப்போடு காண
உடனோடி வந்து அருளி
சிறியேன் எனக்கும் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே. 8

ஏராளச் செல்வம் இருந்தாலும் எல்லாம்
எல்லார்க்கும் வாய்ப்ப திலையே
பாராளும் கந்தன் பார்த்தாலே கிட்டும்
பாரோங்கும் உண்மை நிலையே
ஊராரும் போற்றும் பேரோடு வாழ
உடனோடி வந்து அருளி
சீரான இல்லம் தோதாய் அருள்வான்
சிறுவாபுரிக் குமரனே 9

மெய்பேச வாழ்வில் விளையாது துன்பம்
விதிகூறும் உண்மை இதுவே
பொய்பேசிச் செல்வம் புகழோடு யாரும்
புவி வாழ்ந்த தென்றும் இலையே
கையாற வேலன் கால்தேடிப் பற்றக்
கவினாடும் இன்பநிலையே
தெய்வானைநாதன் ஒருவீடு ஈவான்
சிறுவாபுரிக் குமரனே 10

***

## வரம்.

இப்பாடல் பத்தும் எப்போதும் பாட
எந்நாளும் இன்பம் மிகுமே
செப்பாத போதும் தப்பேதும் இல்லை
செவியாறக் கேட்பின் நலமே
தப்பாது தேடும் தரமான வீடு
தனதாக வந்து விடுமே
அப்பாவின் பிள்ளை அழகேச வள்ளல்
அவனாசி உண்டு நிதமே

திருவையாறு மீயன்னா சேவுகன் செட்டி.

***

## செல்வமகன் பிறக்கவேண்டும்

# பழனியாண்டவா

பழனியாண்டவா முருகா பழனியாண்டவா – இந்தப்
பாரெல்லாம் ஆள்பவரே பழனியாண்டவா
குன்றக்குடிச் சண்முகரே பழனியாண்டவா – எங்கள்
குலமெல்லாம் காப்பவரே பழனியாண்டவா

முத்தான முத்தல்லவோ பழனியாண்டவா – செல்வ
முத்துகுமர தெய்வமேஎன் பழனியாண்டவா
சக்திவேலைப் பெற்றவரே பழனியாண்டவா – ஒரு
சந்ததியைத் தந்தால் என்ன பழனியாண்டவா
(சந்ததியைத் தரவேண்டும் பழநியாண்டவா)

பழனிமலைப் பேர்அரசே பழனியாண்டவா – கூறும்
பக்தர்குறை தீர்ப்பவரே பழனியாண்டவா
பாலதெண்ட பாணியே என் பழனியாண்டவா – சிவ
பாலன்வந்து பிறக்கவேணும் பழனியாண்டவா.

ஷண்முகமாய் ஒளிவீசிப் பழனியாண்டவா – மன
சஞ்சலங்கள் தீப்பவரே பழனியாண்டவா
குன்றுதோரும் ஆடிவரும் பழனியாண்டவா – நல்ல
குமரன்வந்து பிறக்கவேணும் பழனியாண்டவா

மயிலேறி விளையாடிப் பழனியாண்டவா – எங்கள்
மனக்குறைகள் தீர்ப்பவரே பழனியாண்டவா
மங்களங்கள் பெருகிவரப் பழனியாண்டவா – செல்வ
மகன்வந்து பிறக்கவேணும் பழனியாண்டவா
சேவல்கொடி கொண்டவரே பழனியாண்டவா
சிங்கார வேலவரே பழனியாண்டவா
செந்தில்வளர் ஆண்டவரே பழனியாண்டவா – ஒரு
செல்லமகன் பிறக்கவேணும் பழனியாண்டவா

தங்கரதம் ஏறிவரும் பழனியாண்டவா – புகழ்
தெண்டபாணித் தெய்வமேஎன் பழனியாண்டவா
ஆடுமயில் ஏறிவரும் பழனியாண்டவா – ஒரு
அருமைமகன் பிறக்கவேணும் பழனியாண்டவா

வயலூரில் வாழ்பவரே பழனியாண்டவா – என்
வருத்தமெல்லாம் தீர்ப்பவரே பழனியாண்டவா
வடிவழகே பேரழகே பழனியாண்டவா
வரம்தருவாய் மகன்பிறக்க பழனியாண்டவா

காலடியில் விளையாடிப் பழனியாண்டவா – மனக்
கவலைஎல்லாம் தீர்ப்பவரே பழனியாண்டவா
உன் சேவடியே சரணமெனப் பழனியாண்டவா
தினம்தொழுவேன் மகன்தருவாய் பழனியாண்டவா

கொஞ்சுதமிழ்ப் பாடல்கேட்கும் பழனியாண்டவா – சிரிக்கும்
குழந்தைவடி வேலவனே பழனியாண்டவா
தஞ்சமென்றேதாள் பணிந்தேன் – பழனியாண்டவா – நீ
கொஞ்சம் கண்ணைத் திறந்துபாரேன் பழனியாண்டவா

– அருளிசைமணி நேமத்தான்பட்டி சுப்பையா

***

## அருள்வாயே ! அபிராமியே !

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்
அலையாழி அரிதுயிலு மாயனது தங்கையே !
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி !
அருள்வாமி ! அபிராமியே !

***

# வாழ்த்து

ஸர்வ மங்கள மாங்கல்யே  சிவே ஸர்வார்த்த ஸாதகே
சரண்யே திரியம்பகே தேவீ  நாராயணீ நமோஸ்துதே.

வேல் வாழி; மயில் வாழி; சேவல் வாழி;
வேறுமுள படை வாழி; விளங்குதண்டைக்
கால் வாழி அருள் பொழியும் விழிகள் வாழி;
கவின் குலவும் ஈராறு கரங்கள் வாழி;
மால் வாழி; வாழியெனப் பணிந்து வாழ்த்தும்
மலைமாது திருமுருகன் மகிழ்ந்த ஆறு
பால் வாழி ; எனை ஆளுங் கருணை வாழி;
பங்கிருந்த மங்கையர்தம் பதங்கள் வாழி;

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்

பிறந்த குலம் உயர வேண்டும்
சிறந்த தமிழ் பயில வேண்டும்
கறந்த பால் தூய்மை வேண்டும்
கனிந்த பழ நெகிழ்ச்சி வேண்டும்
நன்று நாம் வாழ வேண்டின்
நமக்குள்ளே ஒருமை வேண்டும்
நறுமண வாழ்க்கை வேண்டும்
நல்லவர் நினைவு வேண்டும்
பொறுமையின் கருவி கொண்டு
புதுநலத் தடங்கள் காண்க

– வ.சுப. மாணிக்கனார்.

## திருக்குறள்

பால் : அறத்துப்பால்

இயல் : இல்லறவியல்

அதிகாரம்: செய்ந் நன்றி அறிதல்

குறள் : செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

பொருள் : ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாத போதும், அவர் நமக்கு உதவினால், அதற்கு கைம்மாறாக மண்ணுலகையும், விண்ணுலகையும் கொடுத்தாலும் சமம் ஆகாது.

குறள் : காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது.

பொருள் : நமக்கு நெருக்கடியான நேரத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியது என்றாலும், உதவிய நேரத்தை எண்ணி அது இந்தப் பூமியை விட மிகப் பெரியதாகும்.

குறள் : பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

பொருள் : என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமலே, அன்பின் காரணமாக ஒருவர் செய்த உதவியின் சிறப்பு கடலைவிடப் பெரியது.

குறள் : தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக
கொள்வர் பயன்தெரி வார்.

பொருள் : தினை அளவாக மிகச்சிறிய உதவியே செய்யப் பெற்றிருந்தாலும் உதவியின் பயனை நன்கு அறிந்தவர் அதைப் பனை அளவு மிகப்பெரிய உதவியாய்க் கருதுவர்.

குறள் : உதை வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

பொருள் : உதவி என்பது செய்யப்படும் அளவைப் பொருத்து சிறப்பு

அடைவதில்லை. அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொருத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

குறள் : மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

பொருள் : மாசற்றவர்களின் உறவை மறக்கவும் கூடாது. துன்பத்தில் துணை நின்றவர் நட்பைத் துறக்கவும் கூடாது.

குறள் : எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

பொருள் : ஏழேழு தலைமுறைக்கு என்றும், ஏழேழு பிறவிக்கு என்றும் மிகைப்படுத்தி சொல்வது போல, ஒருவருடைய துன்பத்தை போக்கியவரின் தூய்மையான நட்பை நினைத்துப் போற்றுவதற்கு கால எல்லையே கிடையாது.

குறள் : நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

பொருள் : ஒருவர் நமக்கு செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல. அவர்தீமை செய்திருந்தால் அதை மட்டும் அக்கணமே மறந்துவிடுவது நல்லது.

குறள் ; கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

பொருள் : முன்பு நன்மை செய்தவரே பின்பு நம்மை கொலை செய்வது போன்ற தீமையை செய்தாலும் அவர் முன்பு செய்த ஒப்பற்ற நன்மையை நினைத்த அளவில் அத்தீமை மறையும்.

குறள் : எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

பொருள் : எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை.

***